பக்கங்கள்: 19

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 தை 28 சனிக்கிழமை 11.02.2023 கதிர் 95

### இது ரகசியம் அல்ல!

கரகாட்டக்காரன் படத்தில் வரும் வாழைப்பழ நகைச்சுவை உலகப் பிரசித்தம். நடிகர் கவுண்டமணி ஒரு ரூபாய் கொடுத்து இரண்டு பழம் வாங்கி வரச் சொல்வார் நடிகர் செந்திலிடம். செந்திலும் கடைக்குப் போய் இரண்டு பழங்கள் ☞ 2

# வடக்கு, கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் அடுத்த 10 ஆண்டுகளில் கூடுதல் அபிவிருத்தி

## கவனம் செலுத்துகின்றோம் என்கிறார் ஜனாதிபதி



பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டெழ 10 வருடத் திட்டம் அவசியம். அதில் வடக்கு, வட மத்தி மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே நாங்கள் அபிவிருத்தி சார்ந்து மிக கூடுதல் கவனம் செலுத்துகிறோம். விவசாயத்தை முன்னேற்றுவது எமது திட்டத்தின் முக்கிய அம்சமாகும். கிளிநொச்சியிலிருந்து குமண வரை நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். ஒரு ஏக்கரில் இருந்து அதியுச்ச அறுவடையைப் பெற்றுக் கொள்வது எங்களுடைய ☞ 11

## 13 பற்றிய இறுதி முடிவைச் செர்லல

# ரணிலுக்கு பிக்குகள் ஒருவார காலக்கெடு

## மீறினால் நாடுமுழுவதும் போராட்டம் வெடிக்கும் எனவும் எச்சரிக்கை

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பிலான தனது சரியான நிலைப்பாடு என்ன என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பதற்கு ஒரு வார காலக்கெடு வழுங்கியுள்ள பிக்குகள், அப்படிச் செய்யாவிட்டால் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடிக்கும் என்று எச்சரித்துமுள்ளனர். ☞ 2



## மண்ணெண்ணெய் அருந்திய 2 வயதுக் குழந்தை உயிரிழப்பு

இரண்டு வயது ஆண் குழந்தை ஒன்று மண்ணெண்ணெய் அருந்தியதில் பரிதாபகரமாக உயிரிழந்தது.

இந்தச் சம்பவம் நிட்டம்புவ பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நேற்று இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டில் வைக்கப்பட்டிருந்த கொள்கலனில் இருந்த மண்ணெண்ணெய்யைத் தெரியாத்தனமாக குடித்தது என்று குழந்தையின் பெற்றோர் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளனர்.

மண்ணெண்ணெய் குடித்த குழந்தை வத்துபிட்டிவல ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட போதும் அதனைக் காப்பாற்ற முடியவில்லை என்று வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது.



## பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி இலங்கையில்!

### ரணிலையும் சந்தித்துப் பேச்சு

மூன்று நாள் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கூட்டுப்படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் சாஹிர் ம்ாத் மிர்ஸா நேற்று முற்பகல் ☞ 11

# போதைப் பயன்பாட்டை ஒழிக்க 3 மாதங்களுக்குள் உச்ச முயற்சி

## எடுக்கப்படும் என்று யாழ்ப்பாணத்தில் ரணில் உறுதிமொழி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.11

போதைப் பொருள் பாவனையை உச்ச பட்ச நடவடிக்கைகள் மூலம் 3 மாதங்களிற்குள் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் இடம்பெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் ☞ 11

# ரெஜினோல்ட் குரே இறக்கவில்லை; அவரைக் கொன்றுவிட்டார்கள்!

## மைத்திரி பரபரப்புக் குற்றச்சாட்டு

சிரேஷ்ட அரசியல்வாதியான முன்னாள் அமைச்சரும் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநருமான ரெஜினோல்ட் குரே இறக்கவில்லை. அவரைக் கொலை செய்துவிட்டார்கள். ☞ 2



# தேர்தலை அரசு பிற்போட்டால் முழு நாடும் வீதியில் இறங்கும்

## பரப்புரைக் கூட்டத்தில் சஜித் எச்சரிக்கை





நாட்டை அழித்து, வங்குரோத்தடையச் செய்து, இந்நாட்டின் சாதாரண மக்களின் வாழ்க்கையை அழித்துவிட்ட பின்னரும் தேர்தலை ஒத்திவைக்க தற்போதைய அரசு முயற்சிக்கின்றது. தேர்தலைப் பிற்போட்டால் முழு நாடும் வீதியில் இறங்கி, கொழும்புக்கு வந்து இந்நாட்டு மக்கள் ☞ 11

## இந்தியக் குழுவினர் நேற்று தலைமன்னாரில் ஆய்வு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.11

யாழ்ப்பாணத்துக்கு 3 நாள் பயணமாக வருகை தந்த இந்திய தகவல் ஒலிபரப்பு,, மீன்வளம்,கால்நடை பராமரிப்பு மற்றும் பால் வளத்துறை இணை அமைச்சர் எல்.முருகன் மற்றும் மத்தியில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் ☞ 11

## யாழ். மத்திய பஸ் நிலையம் முன் போராட்டம் நடத்தத் தடை விதிப்பு

யாழ்ப்பாணம் மாநகரில் இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்துக்கு நீதிமன்றம் ☞ 11

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கி வருவார். வழியிலேயே ஒன்றைத் தின்றுவிட்டு ஒன்றை மட்டும் கொண்டு வந்து கவுண்டரிடம் கொடுப்பார். அதைப் பார்த்ததுமே 'டென்ஸனாகி' விடும் கவுண்டர், நான் என்ன சொன்னேன் என்பார், செந்தில் பழம் வாங்கி வரச் சொன்னீங்க என்பார். கவண்டர்: எத்தனை பழம்? செந்தில்: ரெண்டு பழம், கவுண்டர்: ஒன்னு இந்தாருக்கு இன்னொன்னு எங்க? செய்தில்: அந்த இன்னொன்னுதான்னே இது என்பார். எத்தனை தரம் கேட்டாலும் யார் கேட்டாலும் எல்லாவற்றுக்கும் திரும்பத் திரும்ப பொறுமையாகப் பதில் சொல்லும் செய்தில் கடைசியில் மட்டும் அந்த இன்னொரு பழம்தான் இது என்று சாதிப்பார். அதிலும் கடைசிதான் இன்னும் உச்சம். கோவை சரளா வந்து ஒரு பழத்துக்கா இவ்வளவு பெரிய பிரச்சினை என்பார், அதற்கு கவுண்டரோ என்ன பழத்த சாதாரணமா சொல்லிட்ட, பழம்தான் பெரிய விசயம், ஒரு பழத்தால பரமசிவன் குடும்பமே ரெண்டாப் பிரிஞ்சி ஒன்னு பழனிக்குப் போயிடிச்சி, அது மாம்பழம் இது வாழைப் பழம், ஆனா பிரச்சினை எல்லாம் ஒன்னுதான் என்பார்.

அது மாதிரியாகி இருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலையும். எது கூட்டமைப்பு என்ற விடயத்தில் வாழைப்பழ காமெடிதான் நடந்துகொண்டிருக்கிறது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பதே தமிழரசு கட்சியே வீட்டுச் சின்னம் என்றாலே தமிழ் தேசிய கூட்டமைப்புதான் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் திருகோணமலையில் வெருகலில் நடந்த ஒரு கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போது சில கட்சிகள் தமது பெயர்களை மாற்றிக்கொண்டு தாம் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று மக்களை குழப்புகின்றன என்றும் எம்.ஏ. சுமந்திரன் கூறியிருக்கிறார்.

"அந்த இன்னொரு வாழைப்பழம் இதுதான்" என்பது அவர் வாதம்.

தனித்து பயணிக்கப்போவதாக வீர வசனம் பேசிய பின்னர், தற்போது அது முடியாத காரியம் என்று தெரிந்தவுடன் தாமே தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனக் கூறி சுமந்திரன் மக்களை குழப்பி வருகிறார் என்று ரெலோவின் ஊடகப் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் குற்றம் சுமத்தியுள்ளார். தமிழ் தேசிய கூட்டமைப்பு என்பது குத்துவிளக்கு சின்னம் என்றும் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

"ஒரு ரூபாய்க்கு எத்தின பழம்? ரெண்டு பழம். ஒன்னு இந்தாருக்கு இன்னொன்னு எங்க?" என்பது அவர் கேள்வி.

பார்க்கலாம் இந்த பழக் காமெடி எதுவரைக்கும் போகிறது என்று.

***

சொப்பன சுந்தரி, அதுதான் யாழ்ப் பாணக் கலாசார நிலையத்தின் விடயத்தில் இன்னும் தெளிவு இல்லை. யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான அந்தக் கட்டடம் இன்று மாநகர சபையிடம் கையளிக்கப்படாது, அப்படிக் கையளிக்கப்படாவிட்டால் பின்னர் ஒருபோதும் கையளிக்கப்படாது என்கிற விடயம், அதன் கையளிப்பு நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய இணை அமைச்சர் மற்றும் பா.ஜ.கட்சி தமிழ்நாடு தலைவர் காதுகள் வரை எடுத்துச் செல்லப்பட்டிருப்பதாகத் தகவல். இன்று காலை நிகழ்வு தொடங்குவதற்குள் ஜனாதிபதியுடன் பேசி அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாக அல்லது குறைந்தபட்சம் இந்தக் கட்டடம் யாழ்ப்பாண மக்களுக்காக யாழ். மாநகர சபைக்காக இந்தியாவால் அமைத்துக் கொடுக்கப்பட்டது என்பதை நிகழ்விலேயே பகிரங்கமாக அறிவிப்பதாக இந்தியத் தரப்பால் வாக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. என்ன தான் நடக்கிறது என்பது இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிந்துவிடும்.

இந்த விடயத்தில் பரிதாபத்துக்குரியவர் புதிய முதல்வர் ஆனல்ட்தான். நேற்று முழு நாளும் நிகழ்வில் தனதும் மாநகர சபையினதும் வகிபாகம் என்ன என்பதை அறிய, உறுதிப்படுத்த இடைவிடாது ஓடிக்கொண்டே இருந்தார். எங்கு சென்றும் இரவு வரை அவருக்கு உறுதியான ஒரு பதில் கிடைக்கவில்லை. எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுகின்றோம் என்று ஜனாதிபதி செயலகத் தொடர்பாளர்களால் திரும்பத் திரும்ப சொல்லப்பட்டாலும் ஆனல்ட்டின் மனம் சாந்தியடைவதாக இல்லை. ஏனெனில் அழைப்பிதழில், கட்டடத்தில் பதிப்பிக்கப்படும் நினைவுக் கல்லில், நிகழ்ச்சி நிரலில் நன்றி உரையில் என்று அவரது பெயர் சேர்க்கப்படும் என முன்னரும் ஜனாதிபதி செயலகத்தால் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், விடயத்தைக் கையாளும் அமைச்சர்கள் இருவருமோ அல்லது ஒருவரோ தனது செல்வாக்கைச் செலுத்தி ஆனல்ட்டை அந்தந்த இடங்களிலிருந்து அகற்றுவதில் குறியாக இருப்பதால் நித்திய கண்டம் பூரண ஆயுசு என்கிற நிலையிலேயே ஆனலட்டின் காலம் கழிகிறது.

ஜனாதிபதி செயலகம் வாக்குறுதியளித்தபடி கல்லிலும் நன்றியுரையிலும் போடப்பட்டிருந்த ஆனல்ட்டின் பெயர் பின்னர் நீக்கப்பட்டதாகச் செய்தியறிந்ததும் அப்படி நடந்தால் நான் அந்த நிகழ்வைப் புறக்கணிப்பேன், மக்களிடம் சென்று அதைப் பகிரங்கமாக அறிவிப்பேன் என்றெல்லாம் துள்ளினார். தனக்கு நெருக்கமான செய்தியாளர்களை அழைத்து அதைச் செய்தியாக்குமாறுகூடச் சொன்னார் என்று கேள்வி. அவர்களும் செய்தியை தத்தமது ஆசிரியர்களுக்கு அனுப்பிய பின்னர், மாலையில் ஆனால்ட் இன்னும் அந்தச் செய்தி பற்றி உறுதியாக இல்லை என்று முணுமுணுத்து வாங்கிக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

பாவம் ஆனல்ட், உள்ளே என்ன நடக்கிறது என்று தெரியாமல் அந்தரப்பட்டு நின்று பின்னர், மாலை 5 மணியளவில் நினைவுக் கல்லில் தனது பெயர் பொறிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மூன்றாம் தரப்பு ஒன்றின் ஊடாக உறுதிப்படுத்தியிருக்கிறார். கல் கலாசார மண்டபத்திற்கு வந்திறங்கிய பிறகுதான் அவரால் பெருமூச்சு விடமுடிந்தது. இன்னும் நன்றியுரையில் அவர் பெயர் இருக்கிறதா இல்லையா என்பது சொப்பன சுந்தரியை யார் வைத்திரு கிறார்கள் என்ற கேள்வி மாதிரித்தான். ஆனாலும் கல்லில் தனது பெயர் பொறிக்கப்பட்டிருப்பதால் இன்று அவர் நிகழ்வைப் புறக்கணிக்க மாட்டார் என்று உறுதியாக நம்பலாம். மணிவண்ணன் முதல்வராக இருந்தபோது, ஆனல்ட் தொடக்கிய திட்டங்கள் உட்பட பலவற் றில் தனது பெயரைப் பொறித்திருக் கின்றபோது, இந்த ஓரிடத்தில் மட்டும் ஆனல்ட்டின் பெயர் பொறிக்கப்படாமல் விடப்படலாமா என்ன? அப்ப நன்றி யுரை? அது கிடக்கிறது, மாநகர சபைத் தேர்தலில் தொகுதியில் போட்டியிடமாட்டேன், பட்டியலில்தான் பெயர் போடப்படும் என்று முதலில் சொல்லிவிட்டு கடைசி நேரத்தில் தொகுதியில் பெயரைப் போட்டது போல ஏதாவது ஒன்றைச் சொல்லிவிட்டுப் போகவேண்டியதுதான். யார் கவனிக்கப் போகிறார்கள்?

***

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச சபைக்கு தமிழ் அரசுக் கட்சி தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து அந்தக் கட்சி நீதிமன்றம் சென்றதல்லவா. அந்த வழக்கை நேற்று நீதிமன்றம் தள்ளுபடி செய்துவுட்டது.

வேட்புமனுவை அங்கீகாரமளிக்கப்பட்ட நபர்தான் தாக்கல் செய்யவேண்டும் என்ற விதியை மீறி தமிழ் அரசுக் கட்சி நடந்துகொண்டதால் அந்த மனுக்களை நிராகரிப்பதாக முல்லைத் தீவு மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்திருந்தார்.

மற்றைய மாவட்டங்களில் எல்லாம் இல்லாத வகையில் இந்த மாவட்டத்தில் மட்டும்தான் ஒவ்வொரு பிரதேச சபைக்கும் ஒவ்வொரு அறையில் வேட்புமனுப் பெற்றார்கள், அதனால்தான் தமது அங்கீகரிக்கப்பட்ட முகவரால் ஒரே நேரத்தில் எல்லா இடங்களிலும் சென்று மனுக்களைத் தாக்கல் செய்யமுடியவில்லை, கரைத்துரைப்பற்றில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட சமயம் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் அதே கட்டடத்துக்குள்தான் இருந்தார் என்று தமிழ் அரசுக் கட்சிக்காரர்கள் வாதாடினார்கள்.

அந்தக் காரணத்தை முன்வைத்தே கட்சியின் பதில் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கமும் மற்றும் இருவரும் வழக்கும் தாக்கல் செய்திருந்தனர். நேற்று வழக்கை உயர்நீதிமன்றம் எடுத்தபோது தேர்தல்கள் ஆணைக்குழு பூர்வாங்க ஆட்சேபனைகளைக் கிளப்பியது. அதை அடுத்து வழக்கைத் தள்ளுபடி செய்வதாக மூவரடங்கிய நீதிபதிகள் ஆயம் தீர்ப்பளித்தது.

நீதிமன்றம் போகின்றோம் வென்று வருவோம் என்றெல்லாம் ஆரவாரமாகத் தொடங்கிய கட்சிக்கார்கள், நேற்றுக் கப்சிப். வாயே திறக்கவில்லை.

**- இடி மின்னல் -**

## ரணிலுக்கு பிக்குகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்குகளை முற்றாக ஒழித்தால் மட்டுமே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும் என்றும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எவராலும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்றும் வலவாஹெங்குணவெவே தம்மரத்ன தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் நாட்டில் ஒற்றுமையை இல்லாதொழித்துள்ளார். 2009 இன் பின்னர் இனங்களுக்கிடையில் ஏற்பட்ட ஒற்றுமையை இல்லாதொழிப்பதற்காகவே 13ஆவது திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டை 9 பகுதிகளாக பிளவடையச் செய்வதே அவரது தேவையாகவுள்ளது. நாட்டிலுள்ள பிரதான பிரச்சினைகளைப் புறந்தள்ளி இவ்வாறான பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றார்.

அவர் கூறுவதைப் போன்று 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால் 9 மாகாணங்களுக்கும் தெரிவு செய்யப்படும் முதலமைச்சர்களால் நாடு சீரழியும்.

எமக்கு தமிழ் மக்களுடன் எந்த பிரச்சினைகளும் இல்லை. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை விடுத்து ஏனையவற்றை மாகாணசபைகளுக்கு வழங்குவதற்கும் நாம் எதிர்ப்பில்லை.

நாட்டில் குருதியாறு பாய்ந்தால் அதற்கு ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும்.

பௌத்த மத குருமார்கள் விகாரையில் இருக்க வேண்டும் என்று சி.வி. விக்கினேஷ்வரன் குறிப்பிடுகின்றார். விகாரையிலிருந்து கொண்டே மக்களின் ஒற்றுமைக்காக செயற்படுவோம் என்பதை அவரிடம் தெரிவித்துக் கொள்கின்றோம்.

13 தொடர்பில் தீர்க்கமான முடிவினை அறிவிக்குமாறு ஜனாதிபதிக்கு ஒரு வாரம் கால அவகாசம் வழங்கியுள்ளோம். அவர் தனது முடிவை மகா சங்கத்தினருக்கு அறிவிக்க வேண்டும். இல்லையேல் நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்துவோம்.

ராஜபக்ஷாக்கள், மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க 13 தொடர்பில் தமது நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் – என்றார்.

## ரெஜினோல்ட் குரே ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பரபரப்புக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன.

தெற்கு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ரெஜினோல்ட் குரேவின் இறப்பு சர்ச்சையைக் கிளப்புகின்றதே?" என்ற கேள்விக்கு

ஆம், அவர் மரணிக்கவில்லை. அவரைக் கொலை செய்துவிட்டார்கள்" என்று பதிலளித்தார் மைத்திரி.

"குரே ஒரு மூத்த அரசியல்வாதி. மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர். களுத்துறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர். முன்னாள் அமைச்சர். வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர். இப்படிப் பல பதவிகளை வகித்திருந்த ரெஜினோல்ட் குரே இறக்கவில்லை. அவரைக் கொலை செய்து விட்டார்கள்.

அவர் இறப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன் இருதய சத்திர சிகிச்சை செய்திருந்தார்.

களுத்துறையில் தேர்தல் கூட்டணி அமைப்பது தொடர்பான பேச்சில் அவர் கலந்துகொண்டிருந்தார்.

அவர் அங்கு செல்வதற்கு முன் என்னிடம் கூறினார். நான், நீங்கள் போக வேண்டாம்; ஓய்வெடுங்கள். வேறு ஒருவரை அனுப்புங்கள் என்றேன். அவர் என்னிடம் சொல்லாமல் போய்விட்டார்.

கூட்டத்தில் பெரும் சண்டை எழுந்

(11ஆம் பக்கம் பார்க்க)



## இடைக்கால ஜனாதிபதியான ரணிலுக்கு

# 13ஐ முழுமையாக செயற்படுத்த அதிகாரம் வழங்கியது யார்?

### நாலக கொடஹேவா கேள்வி



அரசமைப்பின் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கு இடைக்கால ஜனாதிபதிக்கு இருக்கும் அவசரம் என்ன? அதற்கு அவருக்கு அதிகாரம் வழங்கியது யார்? புதிய அரசமைப்புப் பொன்றை கொண்டுவரவே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் ஆணை வழங்கி இருந்தனர் என எதிர்க்கட்சி உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது –

அரசமைப்பின் 13 ஆம் திருத்தம் 1987 ஆம் ஆண்டுகொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் நாட்டில் 7 ஜனாதிபதிகள் நாட்டை ஆட்சி செய்தபோதும் 13 ஐ முழுமையாக செயற்படுத்த எந்த ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

குறிப்பாக 13 ஐக் கொண்டுவந்த ஜனாதிபதி ஜே.ஆர். கூட இதனை முழுமையாக செயற்படுத்தவில்லை. அவ்வாறு இருக்கையில் இடைக்கால ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 ஐ முழுமையாக செயற்படுத்த இருக்கும் அவசரம் என்ன? அதற்காக அவருக்கு யார் அதிகாரம் வழங்கியது?

அத்துடன் ரணில் விக்கிரமசிங்க தற்போது ஜனாதிபதி ஆசனத்தில் இருக்கின்றமை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்ட மக்கள் ஆணையின் அடிப்படையிலாகும்.

புதிய அரசமைப்புப்பொன்றை கொண்டுவரவே கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மக்கள் ஆணை வழங்கி இருந்தனர். நாட்டில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண, நாட்டின் அனைத்து மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண புதிய அரசமைப்பு கொண்டு வருவதாக மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கே இந்த மக்கள் ஆணை வழங்கப்பட்டது.

அதனால் மக்கள் ஆணை இருப்பது புதிய அரசமைப்பொன்றை கொண்டு வருவதற்கே அன்றி 13 ஆம் திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவதற்கு அல்ல.

அதனால் இடைக்கால ஜனாதிபதி ஒருவரின் தலைமையில் தற்போது 13 ஆம் திருத்தம் தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று அவசியமில்லை. அதனால் கோட்டாபய ராஜபக்ஷ வாக்குறுதியளித்த புதிய அரசமைப்பை கொண்டுவாருங்கள். அது தொடர்பில் நாங்கள் கலந்துரையாடுவோம். விவாதிப்போம். அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

எனவே 6 மாதங்களுக்கு ஒருமுறை அக்கிராசன உரை நிகழ்த்தி வீழ்ந்திருக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாட்டை கட்டியெழுப்ப பொருளாதாரத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பத் தேவையான தொழில் முயற்சியாளர்களை பலப்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதற்கு பல வேலைத் திட்டங்கள் இருக்கும் நிலையில் அக்கிராசன உரை என நகைச்சுவை கதை சொல்லி இருக்கிறது. – என்றார்.

# சிறுநீரக மோசடி தொடர்பில் மற்றொரு நபரும் கைது!

பொரளை தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிறுநீரகங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வறிய மக்களை ஏமாற்றி பண மோசடியில் ஈடுபட்ட மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கொழும்பு குற்றத் தடுப்புப்பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் வியாழக்கிழமை இரவு டுபாய் செல்வதற்காக விமான நிலையத்துக்கு சென்றிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேகநபர் வைத்திய சாலையில் பணிபுரிபவர் போன்று வேடமணிந்து இந்த இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.


**Jaffna College Institute of Technology**

**பின்வரும் பாடநெறிகள் Feb. மாத இறுதியில் ஆரம்பிக்கப்பட உள்ளன.**

**1. Computer Certificate Courses ( 3 – 4 months Part time)**
- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (Page Maker, Photo Shop & CorelDraw)
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

**2. Civil Draftsperson ( one year )**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5

**3. FIT - pre degree Programme for University of Colombo IT degree.**
Qualification GCE(O/L)

**4. Certificate in Craft Courses (6 மாதங்கள் முழு நேரம் -தமிழ் மொழி மூலம்)**
- குளிரூட்டுதல் பயிற்சி நெறி -Refrigeration & Air-Conditioning Mechanic
- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்- NVQ Level -3 (Accredited) –Aluminum Fabricator
- மின்னியலாளர் (Certificate in Electrician)- NVQ

பாடத்திட்டத்தை தழுவியது
Our Civil Draftsperson & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC ) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Library & Sports
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க
**Director**
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai. Tel. no: 0212250975 / 0212223382.**


# நாட்டின் பெருந்தோட்ட மக்களையும் அரசியல் நீரோட்டத்தில் இணைக்குக!

### அரவிந்குமார் எம்.பி. வலியுறுத்து



மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு ஆணைக் குழுக்கள் தேவையில்லை நடைமுறையில் நிலவும் பாரபட்சம் நீக்கப்பட்டால் அனைவரும் சமமாக வாழ்வதற்கான வழி பிறக்கும். பெருந்தோட்ட மக்களை அரசியல் நீரோட்டத்தில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நம் ஜனாதிபதிக்கு முன் வைத்துள்ளோம் என கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்த குமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினை, மலையக மக்களின் பிரச்சினை என பல வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவை தீர்க்கப்பட வேண்டும்.

மலையகப் பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருந்தமை வரவேற்கத்தக்கது. தமது அரசியல் சுயநலங்களுக்காக மக்களை பகடைக்காய்களாகப் பாவிக்கும் அரசியல்வாதிகள் தொடர்பில் வன்மையான கண்டனத்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில் அவற்றுக்கு முட்டுக்கட்டை போடும் நடவடிக்கைகளை இனவாதிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இனவாதிகள் ஓரம் கட்டப்பட வேண்டும். இந்த நாட்டு மக்கள் எவரும் பகைவர்களாக நாட்டில் வாழ வேண்டிய அவசியம் இல்லை. அரசியல் நோக்கத்துக்காக அவ்வாறு மக்களை பயன்படுத்துபவர்கள் அரசியலிலிருந்து ஓரங்கட்டப்பட வேண்டும்.

நாடு மிகவும் நெருக்கடி நிலையை சந்தித்த தருணத்திலேயே துணிச்சலாக இந்த நாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றார். அவருக்கு 25 வருட தொலைநோக்கு காணப்படும் நிலையில் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அவர் தற்போது அடித்தளமிட்டு வருகின்றார்.

அதற்காக கட்சி, இன, மத, மொழி பேதமின்றி அனைவரும் அவருக்கு கை கொடுக்க வேண்டும். பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் காணப்படுவதால் அதற்கான முழுமையான ஒத்துழைப்பை அனைத்துத் தரப்பினரும் வழங்க வேண்டும்.

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கு ஆணைக் குழுக்கள் தேவையில்லை நடைமுறையில் நிலவும் பாரபட்சம் நீக்கப்பட்டால் பிரச்சினைகள் தோற்றம் பெறா. பாரபட்சம் நீக்கப்பட்டாலே அனைவரும் சமமாக வாழ்வதற்கான வழி பிறக்கும். இனவாதத்துடன் செயல்படுபவர்கள் அரசியலிலிருந்தே ஓரங்கட்டப்பட வேண்டும். பெருந்தோட்ட மக்களை அரசியல் நீரோட்டத்தில் இணைக்க வேண்டும் என்ற கோரிக்கையை தாம் ஜனாதிபதிக்கு முன் வைத்துள்ளோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பதில் சொல்வாரா ரணில்?

இந்திய மக்களின் பணத்தில் அந்த நாட்டு அரசால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாண கலாசார நிலையம் இன்று மக்களுக்கு உரித்தாக்கப்படவுள்ளது. மிக நீண்ட எதிர்பார்ப்புகளுக்குப் பின்னர் அந்த நிலையத்தை யாழ்ப்பாண மக்கள் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதற்காக இந்திய மக்களுக்கும் அரசுக்கும் தமிழ் மக்கள் நன்றியுடையவர்கள். இலங்கை அரசின் பணத்திலோ அல்லது யாழ். மாநகர சபையின் பணத்திலோ இத்தகையதொரு கலாசார நிலையத்தை அமைப்பதாயின் இன்னும் பல தசாப்தங்கள் யாழ்ப்பாண மக்கள் காத்திருக்க வேண்டியிருந்திருக்கும். அந்த வகையில் யாழ்ப்பாண மக்களை பல வருடங்களுக்கு முன்னகர்த்திய இந்தியாவின் உதவி போற்றத்தக்கது. பெருமை மிக்கது.

இந்தக் பெருமை மிகு கட்டடத்தை மக்களுக்கு உரித்தாக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார் அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க. நகரில் உள்ள விடுதியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல்வேறு துறைசார் வல்லுநர்கள் 200 பேரைச் சந்தித்தார். அபிவிருத்தி தொடர்பானது அந்தக் கூட்டம் என்று முன்கூட்டியே சொல்லப்பட்டிருந்தது. எனினும் சுமார் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக நடந்த அந்தக் கூட்டத்தில் ரணில் ஒரு வார்த்தைகூட அரசியல் பற்றிப் பேசவில்லை.

தமிழ் மக்கள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள் என்பது உண்மைதான், போராலும் பின்னர் கொரோனாவாலும் பின்னர் பொருளாதார நெருக்கடியாலும் என்று மாறி மாறி தொடர்ந்து பல தசாப்தங்களாகப் பாதிக்கப்பட்டு வந்திருப்பவர்கள் தமிழர்கள். அவர்களுக்கு இலங்கையின் மற்றெல்லா மக்களைவிடவும் பொருளாதார மீட்சி மிக மிக அவசியம். அதேநேரத்தில் அரசியல் மீட்சியும் சுதந்திரமும் இல்லாத பொருளாதார மீட்சி என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அர்த்தமற்றது. எனவே பொருளாதார அபிவிருத்திக்குச் சமாந்தரமாக அரசியல் தீர்வையும் வளர்ச்சியையும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். இது ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தெரியாத விடயமல்ல.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்திற்குள் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்துத் தான் ஒரு அறிவிப்பை வெளியிடுவார் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதன் பின்னர் கடைசியாக அவர் கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் மாசி மாதம் 8ஆம் நாள் நாடாளுமன்றத்தில் தான் ஆற்றும் கொள்கை விளக்க உரையில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவேன் என்பதை அறிவிப்பேன் என்று கூறியிருக்கிறார்.

அதே கூட்டத்தில் ஒற்றையாட்சிக்குள் உச்சபட்ட அதிகாரங்களைப் பகிர்வதற்கு நான் தயார் என்று அவர் சொன்ன விடயம் அவரது கொள்கை விளக்க உரையிலும் இடம்பெற்றது. ஆனால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதான அறிவிப்பு எதுவும் அவரது உரையில் இருக்கவில்லை. அதேபோன்று இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக ஒரு தீர்வோ அல்லது தீர்வுக்கான அடிப்படைச் சட்டகமோகூடத் தயாராகவில்லை. குறைந்தபட்சம் அந்தத் தினத்திற்கு முன்னர் தமிழர் தரப்புக் கோரிய உடனடியாகத் தீர்க்கப்படவேண்டிய விடயங்களுக்குக்கூட முழுமையாகப் பதிலளிக்கப்படவில்லை.

இவையெல்லாவற்றுக்கும் என்ன பதில்? இன்று யாழ்ப்பாண கலாசார நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் இவற்றுக்குப் பதிலளிப்பாரா அரச தலைவர்? அவர் பதிலளிக்கவேண்டும், வாக்குறுதிகளைத் தானே முன்வந்து தந்துவிட்டும் அவற்றை நிறைவேற்றாதுவிட்ட காரணம் என்ன என்பதை அவர் விளக்கவேண்டும்.

# ஒற்றையாட்சியைக் குப்பையில் கடாசிவிட்டு சமஷ்டி முறையிலான தீர்வை ஏற்படுத்துங்கள்!

## நாடாளுமன்றில் கஜேந்திரன் சீற்றம்



நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதனை ஒற்றையாட்சிக்குள் செய்ய முடியாது. ஒற்றையாட்சி என்ற விடயத்தை குப்பையில் கடாசிவிட்டுத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தி சமஷ்டியை ஏற்படுத்துங்கள்.

அதனை விடுத்து கவர்ச்சிகரமான வசனங்களின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ஜனாதிபதி பதவி வகிப்பவர் எந்நிலையிலும் உண்மையைக் குறிப்பிட வேண்டும் அதனை விடுத்து அப்பட்டமாகப் பொய்யுரைக்கக் கூடாது.

ஜனாதிபதியின் கருத்துக்கள் தமிழ் மக்களை ஏமாற்றுவதுடன் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து இழைக்கும் துரோகமாகக் கருதப்படும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் உரை எதிர்ப்புகளை ஏற்படுத்தி காத்திருக்கவைத்த உரையாக இருந்த நிலையில் அந்த உரை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அது நூறு வீதம் ஏமாற்றத்தையே தந்துள்ளது.

75 வருடங்களாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும், சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு வழங்கப்படும் என்றும் கூறியிருந்தார்.

ஆனால், சுதந்திர தினம் முடிந்து அவர் அக்கிராசன உரையை மேற்கொண்ட போதும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஆக்கபூர்வமான எந்தத் திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை.

ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வுகளை மேற்கொள்ளத் தயார் என்று கூறியுள்ளார். ஜனாதிபதியாக இருப்பவர் எவ்வேளையிலும் உண்மைகளைக் கூறுபவராக இருக்க வேண்டும்.

தொடர்ந்தும் அப்பட்டமான பொய்களைக் கூறிக்கொண்டு இருக்கக் கூடாது. 13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக பிரசன்ன ரணதுங்க கூட்டமொன்றில் கூறியிருந்தார். அதுதான் உண்மை. 13 ஆவது திருத்தம் தொடர்பில் சில அதிகாரங்களைக் கையாள முயன்றபோது அது தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒற்றையாட்சிக்குள் உட்சப்பட்ட அதிகாரம் என்று கூறுகின்றமை ஏமாற்று கதை என்பதுடன் தமிழ் தரப்புளுடன் சேர்ந்து தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக செய்யும் துரோகமும் சதியுமே ஆகும்.

இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். அதனை ஒற்றையாட்சிக்குள் செய்ய முடியாது.

இதனால் ஒற்றையாட்சி என்ற விடயத்தைக் குப்பையில் போட்டு தமிழர்களின் சுயநிர்ணய உரிமை உறுதிப்படுத்தி சமஷ்டியை ஏற்படுத்துங்கள். அதனை விடுத்து கவர்ச்சிகரமான வசனங்களின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது என்பதைக் கூறிக்கொள்கின்றேன். - என்றார்.

# புகழுடையவேண்டிய தேவை ஜனாதிபதிக்குக் கிடையாது!

## நிமல் லான்சா திட்டவட்ட அறிவிப்பு



அரசியல் நோக்கத்துக்காக பிரபல்யமடையும் தேவை ஜனாதிபதிக்கு கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஜனாதிபதியின் பொருளாதாரக் கொள்கைத் திட்டத்தை கடுமையாக விமர்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியினர் இதுவரை பொருளாதார மீட்சிக்கான கொள்கைத்திட்டங்களை முன்வைக்கவில்லை.

மாறாக, குறுகிய அரசியல் நோக்கத்துக்காக நாட்டை வலம் வந்து தேர்தல் பிரசாரம் செய்துகொள்கிறார்கள்.

உழைக்காமல் எவ்வாறு சொகுசாக வாழ்வது என்பது தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணியினர் நாட்டு மக்களுக்கு சொல்லிக்கொடுக்க வேண்டும்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் வியாபாரம் ஏதும் செய்வதில்லை. தொழில் செய்வதில்லை. ஆனால், சொகுசாக வாழ்கிறார்கள்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பிறரை 'திருடர்' என விமர்சிக்கிறார். ஆனால், அரசியல் பிரசாரங்களுக்காக கோடிக்கணக்கில் தற்போது நிதியை செலவிடுகிறார்.

நாட்டு மக்கள் தம்மைத் தெரிவு செய்வார்கள் என்ற நிலைப்பாட்டில் இருந்துகொண்டு மக்கள் விடுதலை முன்னணியினர் தற்போது செயற்படுகிறார்கள்.

அரசியல் பேரணி ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முடியாது என்று குறிப்பிட்டோம். ஆனால், நாட்டு மக்கள் அவரை ஜனாதிபதியாக்கினார்கள்.

இறுதியில் நேர்ந்தது என்ன? நாங்களே அடிபட்டோம். ஆகவே, மக்கள் விடுதலை முன்னணியின் போலி பிரசாரங்களுக்கு மக்கள் ஏமாற்றமடையக்கூடாது.

போதைப்பொருள் வியாபாரிகள், பாதாளக் குழுவினர், சண்டியர்கள், சமூக விரோதிகள் தான் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளார்கள்.

மே 9 அன்று வன்முறையில் ஈடுபட்டவர்கள் மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்களாக உள்ளார்கள். நாட்டு மக்கள் இவர்களையா தெரிவுசெய்யப் போகிறார்கள். - எனத் தெரிவித்துள்ளார்.

# துறைமுக நகரத்தை சீனாவிற்கு வழங்கும் போது 13 ஆவது திருத்தத்தை ஏன் அமுல்படுத்த முடியாது?

## சரித ஹேரத் கேள்வி



கொழும்பு துறைமுக நகரத்தை ஒப்பந்தத்தின் ஊடாக சீனாவிற்கு வழங்கும் போது 13 ஆவது திருத்தத்தை ஏன் அமுல்படுத்தக் கூடாது. 13 ஆவது திருத்தம் தொடர்பில் சமூகத்தின் மத்தியில் தவறான நிலைப்பாடு தோற்றம் பெற்றுள்ளது.

அதற்கான வழியை ஜனாதிபதியே காண்பித்துள்ளார். தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமாயின் 13 ஆவது திருத்தத்துடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

குறுகிய அரசியல் நோக்கத்துக்காக 13 ஆவது திருத்தத்தைத் தவறாக பார்ப்பது நிராகரிக்கத்தக்கது என நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்தி வைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

அரசாங்க கொள்கை முன்வைப்பு தற்போது அரசாங்கத்தின் பிரதான கொள்கையாக ஒரு விளம்பரமாகக் காணப்படுகிறது.

கடந்த காலங்களில் ஆணைக்குழு ஸ்தாபித்ததை போன்று தற்போது கொள்கைப் பிரகடனம் விளம்பரமாகக் காணப்படுகிறது. ஜனாதிபதியால் குறிப்பிடப்பட்ட கொள்கை உரையின் உள்ளடக்கத்தை முன்னிலைப்படுத்தி அரசியல் செய்ய முடியாது.

ஜனாதிபதியின் கொள்கை உரையை ஆளும் தரப்பினர் புகழ்கிறார்கள். கடந்த அரசாங்கம் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மறைமுகமாகக் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் முட்டாள் தனமாக முகாமைத்துவம் செய்தார் என ஜனாதிபதி குறிப்பிடுகிறார். இதனையே ஆளும் தரப்பினர் தற்போது புகழ்கிறார்கள்.

பிரபல்யமடையும் வகையில் எடுத்த தீர்மானங்கள் பொருளாதாரப் பாதிப்புக்கு காரணம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலுக்கு வந்ததை போல் குறிப்பிடுகிறார்.

40 வருடங்களுக்கு மேல் ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டை ஆட்சி செய்தது. தற்போது பிறர் மீது ஜனாதிபதி பழி சுமத்தும் வகையில் உரையாற்றுகிறார்.

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உண்மையைக் குறிப்பிட வேண்டும். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஜனாதிபதி முன்வைத்த ஒருசில திட்டங்களை ஏற்றுக் கொள்கிறோம். சிறந்த விடயங்களை ஒருபோதும் மறுக்கப் போவதில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 13 ஆவது திருத்தம் தொடர்பான கருத்துக்களை ஜனாதிபதி சமூகமயப்படுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கும், இனங்களுக்கிடையில் உள்ள கருத்து வேறுப்பாடுகளுக்கும் தீர்வு காணாமல் நாட்டை ஒருபோதும் முன்னேற்ற முடியாது.

பல்லின கலாசாரத்தை ஒருமுகப்படுத்தியதால் இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னேற்றமைந்துள்ளது, ஆகவே 13 ஆவது திருத்தத்தையும் ஒருமுகப்படுத்தும் வகையில் செயற்படுத்த வேண்டும்.

தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமாயின் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.

அதற்கு 13 ஆவது திருத்தமே அடித்தளம். ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேவையில்லாத பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளார்.

13 ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில சிறந்த விடயங்களை முறையாக செயற்படுத்த வேண்டும். அதனை விடுத்து 13 ஆவது திருத்தம் தொடர்பில் சமூகத்தின் மத்தியில் தவறான நிலைப்பாட்டைத் தோற்றுவிக்கக் கூடாது.

ஒப்பந்தம் ஊடாகக் கொழும்பு துறைமுக நகரம் வழங்கப்பட்டுள்ளமைக்கு எவரும் அச்சமடையாத போது 13 ஆவது திருத்தத்தின் சிறந்த விடயங்களை ஏன் முழுமையாக அமுல்படுத்தக் கூடாது, இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாமல் நாடு என்ற ரீதியில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது. – என்றார்.




## தபால் மூலம் வாக்களிப்பதற்காக 6 லட்சத்து 76 ஆயிரம் பேர் தகுதி!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க ஆறு லட்சத்து 76 ஆயிரத்து 873 பேர் தகுதி பெற்றுள்ளனர் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதில் குருநாகல் மாவட்டத்தில் அதிகளவாக 75 ஆயிரத்து 579 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குறைந்தளவான தபால்மூல வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும், அந்த எண்ணிக்கை மூவாயிரத்து 187 எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

## தபால்மூல வாக்களிப்புக்கான 40,000 விண்ணப்பங்கள் நிராகரிப்பு!

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான கியு.ஆர். குறியீட்டை அறிமுகப்படுத்த தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய இந்த ஆண்டு தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களைச் சேர்ந்த வேட்பாளர்களின் பட்டியல் உரிய கியு.ஆர். குறியீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மார்ச் 9 ஆம் திகதி நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை,தபால்மூலம்வாக்களிப்பதற்காக விண்ணப்பித்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரச ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சக அலுவலகம் தெரிவித்துள்ளது.

# 13 ஐ முழுமையாக அமுல்படுத்தினால் ஜனாதிபதி ரணிலும் அழிந்துபோவார்

## அச்சுறுத்துகிறார் உதய கம்மன்பில



அதிகாரப் பகிர்வு என்ற தற்கொலை அங்கியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அணிந்துள்ளார். 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தினால் ஜனதிபதியும் அழிவார், நாடும் அழிவடையும். அதிகாரப் பகிர்வு என்ற தீ பந்தை ஜனாதிபதி கையில் எடுத்துள்ளார்.

வெகுவிரைவில் பதவி பறிபோகும். நாட்டை இரத்த வெள்ளக்காடாக்கும் அதிகாரப் பகிர்வுக்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்துவதாக சர்வகட்சி கூட்டத்தில் கூறியிருந்தார்.

தனது நாடாளுமன்ற சிம்மாசன உரையில் இது தொடர்பில் அறிவிக்கவுள்ளதாகவும் கூறியிருந்தார். சர்வக்கட்சி அரசாங்கத்தில் அன்று சிங்கம் போன்று கூறினாலும் சிம்மாசன உரையின் போது சிறிய கொக்கரிப்பு மட்டுமே இருந்தது.

நாங்கள் மேற்கொண்ட எதிர்ப்புகளை அவர் புரிந்து கொண்டுள்ளார் என்று நாங்கள் கருதுகின்றோம். அதன்படி அவர் புரிந்துகொண்டு தொடர்ந்தும் செயற்பாடுவார் என்று எண்ணுகிறோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் காணி விடயத்தில் அது தொடர்பான ஆணைக்குழுவை அமைப்பதே எஞ்சியுள்ளது. அத்துடன் வடக்கு மற்றும் கிழக்கை ஒன்றிணைத்த தனியான மாகாண சபையை அமைத்தல் ஆகியன வும் எஞ்சியுள்ளன.

1987 ஆம் ஆண்டில் எதிர்ப்புகளுக்கு மத்தியில் அவசரகால சட்டத்தின் ஊடாகவே வடக்கு மற்றும் கிழக்கு இணைப்பு நடந்தது.

அந்த சட்டம் நிறைவடைந்ததும் அந்த இணைப்பு செல்லுபடியற்றதாகியது. ஆனாலும் அந்த விடயம் அரசமைப்பில் இருக்கும் வரையில் அந்த இரண்டு மாகாணங்களும் ஒன்றிணையும் வாய்ப்பு உள்ளது. இதற்கு இணங்குகின்றீர்களா? என்று ரவூப் ஹக்கீம் போன்றோரை கேட்கின்றேன்.

வடக்கு மற்றும் கிழக்கில் தொல்பொருள் விடயத்தை ஒப்படைப்பதையும் அனுமதிக்க முடியாது. அது நரியிடம் கோழியை ஒப்படைப்பது போன்றது.

இதேவேளை பொலிஸ் அதிகாரங்கள் விடயத்தில் 7 ஜனாதிபதிகள் பதவி வகித்த காலத்திலும் சில காரணங்களுக்காக அந்த அதிகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படவில்லை.

ஏற்கனவே நாடு கடந்த தமிழ் ஈழம் இருக்கின்றது. நிலப்பரப்பு இல்லாவிட்டாலும் திபேத் போன்று இதனை வைத்திருப்பதற்குத் திட்டமிடுகின்றனர்.

அன்று விடுதலைப் புலிகளுக்கு பல்வேறு நாடுகள் திருட்டுத் தனமாக ஆயுதங்களை வழங்கியிருந்தன. இவ்வாறான நிலைமையில் வடக்கிற்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் மீண்டும் இந்த நாடு இரத்தக் காடாகும் நிலைமை ஏற்படும்.

எம்மைப் போன்ற சிறிய நாட்டில் 10 பொலிஸ் பிரிவுகளை ஏற்படுத்தினால் நாட்டில் குற்றங்களை கட்டுப்படுத்தவும் தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் முடியாது போகும்.

அதேபோன்று அதிகாரப் பகிர்வு தொடர்பாக கதைத் துக்கொண்டுசென்றால் இறுதியில் ஜனாதிபதிபதவிக்கே பாதிப்பாக அமையும். அதேபோன்று 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த எவருக்கும் இடமளிக்க மாட்டோம் என்பதையும் நாங்கள் கூறிக் கொள்கின்றோம்.

நாட்டில் பிரிவினைவாதம் காணப்படும் நிலையில் வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் நாட்டின் போராட்டம் தோற்றம் பெறும்.

13 ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் விக்னேஸ்வரன் போன்ற பிரிவினை வாத கொள்கையுடையவர்கள் வடக்கு மாகாண முதலமைச்சராக நியமிக்கப்படலாம்.

வடக்கு மாகாணத்துக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் இராணுவத்துக்கும், வடக்கு மாகாண பொலிஸ் தரப்பிற்கும் இடையில் முரண்பாடு தோற்றம் பெறும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த 1987 ஆம் ஆண்டு முதல் ஆட்சியில் இருந்த எந்த அரச தலைவர்களும் அவதானம் செலுத்தவில்லை.

பாரதூர தன்மையை விளங்கிக் கொள்ளாமல் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயற்சித்தால் அவரும் அழிய நேரிடும், அவருடன் சேர்ந்து நாடும் அழிவடையும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2001 ஆம் ஆண்டு பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டவுடன் அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவதானம் செலுத்தினார்.

பெறுபேறு இரண்டரை வருட காலத்துக்குள் பதவி துறந்தார். 2015 ஆம் ஆண்டும் அதே தன்மை தொடர்ந்தது. அதிகாரப் பகிர்வு என்ற விடயத்தை தோளில் சுமந்ததால் பிரதமர் பதவியை முழுமைப் படுத்தாமல் பதவி விலக நேரிட்டது. ஒரு தவறைத் தொடர்ந்து தொடர்ந்து செய்தால் அந்த நபரை பைத்தியம் எனக் கருத வேண்டும்.

அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு பைத்தியம் பிடித்தால் அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் அதிகார பகிர்வு என்ற தீ பந்தை ஜனாதிபதி கையில் எடுத்துள்ளார், ஆகவே, பதவி விலக நேரிடும். நாட்டை இரத்த வெள்ளக்காடாக்கும் 13 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல்ல எவரும் முழுமையக நடைமுறைப்படுத்த இடமளிக்க முடியாது. – என்றார்.

# திட்டமிட்டு பொலிஸார் பழிவாங்குகின்றனர்

## காணாமலாக்கப்பட்ட உறவுகள் சங்க தலைவி குற்றச்சாட்டு!

முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி தன்னை திட்டமிட்டு பழிவாங்குகிறார் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

தனது இயலாத மகனைத் திட்டமிட்டு கைது செய்து தன்னை பழிவாங்க முற்படுவதோடு தன்னை போராட்டங்களில் ஈடுபடுவதைத் தடுக்க முனைவதாக ஊடகங்களுக்கு அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் –

இலங்கையினுடைய 75 ஆவது சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக தெரிவித்து தமிழ் இனத்தின் மீதான அடக்குமுறையை நிறுத்தக்கோரி யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் முன்னெடுத்த வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி என்ற போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த சமயத்தில் கடந்த 6 ஆம் திகதி திருகோணமலையில் அவர் பேரணியில் சென்று கொண்டிருந்த போது அவருடைய மகன் வீடு ஒன்றை உடைத்து வீட்டினுள் களவாடச் சென்றார் எனத் தெரிவித்து மகனை தேடி தனது வீடு புகுந்து பொலிஸார் தேடிவருவதாக தெரிவிக்கப்பட்ட தகவலை அடுத்து அவர் போராட்டத்தில் இருந்து முல்லைதீவுக்கு வருகை தந்தார் எனவும் தனது இரண்டாவது மகன் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவராக காணப்படுவதோடு அவர் வேறு நபர்களின் தூண்டுதல்களுக்கு உள்ளாகக் கூடிய நிலைமை இருக்கின்ற வகையிலே தான் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சமயம் பார்த்து வீட்டில் நான் இல்லை என அறிந்து அரச புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸாரின் திட்டமிட்ட செயலாக அவருக்கு போதைப்பொருள் அல்லது வேறு ஏதேனும் கொடுத்து அருகில் இருந்த வீடு ஒன்றுக்குள் செல்லுமாறு பணித்து வீடு பூந்து களவு எடுத்த வகையில் ஒரு வழக்கை தொடர்வதற்காக திட்டமிட்டு முல்லைத்தீவு பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் என மரிய சுரேஷ் ஈஸ்வரி குற்றம் சுமத்தியுள்ளார்.

தன்னுடைய வீட்டுக்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் தன்னுடைய மகன் அத்து மீறி நுழைந்தார் எனத் தெரிவித்து பொலிஸ் நிலையத்தில் அந்த வீட்டுக்காரர் முறைப்பாடு செய்தார் எனத் தெரிவித்து மகனை காணவில்லை எனவும் மகனைத் தேடுவதாகத் தெரிவித்து நான் வீட்டில் இல்லாத நேரம் 15 வரையான பொலிஸார் தனது வீட்டுக்கு வந்து வீட்டிலிருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினுடைய விவரங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களையும் பார்வையிட்டு சோதனையிட்டுள்ளனர்.

பல்வேறு தடவைகள் இந்த போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என பொலிஸார் எச்சரித்திருந்ததும் அதனை மீறி தான் போராட்டத்தில் ஈடுபட்டதை பழிவாங்கும் நிலையிலே பொலிஸார் புலனாய்வாளர்கள் இணைந்து திட்டமிட்டு இந்தச் செயற்பாட்டை நிறைவேற்றியுள்ளனர் என மரிய சுரேஷ்வரி குற்றம் சுமத்தியுள்ளார்.

குறிப்பாக, வடக்கு கிழக்கிலே இடம்பெறுகின்ற பல்வேறு போராட்டங்களில் தான் கலந்து கொள்கின்ற போது தன்னை போராட்டங்களில் கலந்து கொள்ளாமல் தடுப்பதற்காக முல்லைத்தீவு பொலிஸார் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டனர் எனவும் அவை அனைத்தையும் மீறி தான் அந்த விடயங்களில் முன்னெடுத்துச் செல்வதால் தன்னை பழிவாங்கும் நோக்கத்தில் தொடர்ச்சியாக பொலிஸார் செயற்பட்டு வந்தனர் எனவும் தான் இல்லாத நேரம் பார்த்து இவ்வாறான ஒரு செயற்பாட்டை செய்துள்ளார்கள் எனவும் இவ்வாறான நிலையில் மகன் அந்த சம்பவத்தை தொடர்ந்து தலைமறைவாகியிருந்த நிலைமையிலே மகன் யாழ்ப்பாணத்தில் உள்ள அவருடைய உறவினர்களின் வீட்டுக்கு சென்ற நிலையில் மகனை வியாழக்கிழமை காலை முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் அழைத்து வந்தேன்.


முறைப்பாடு செய்ததாக தெரிவித்த வீட்டில் உரிமையாளர்களும் இது ஒரு பிரச்சினை இல்லை எனவும் மகனை காணவில்லை. ஏதாவது செய்தாலும் என்ற பயத்தாலேயே தாம் பொலிஸில் தெரிவித்தனர் எனவும் அதை சமரசமாக முடிப்பதாகவும் தெரிவித்தும் காலையில் பொலிஸ் நிலையத்திற்கு சென்ற தன்னுடைய மகனை கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்த உள்ளதாக தெரிவித்திருக்கின்றனர்.

குறிப்பாக காலை வேளையிலே (8.40) மகனை கைது செய்திருந்த போதும் மாலை 3 மணி வரை கைது செய்தமைக்காக வழங்கப்படும் பத்திரத்தை கூட பொலிஸார் வழங்கவில்லை எனவும் தான் சண்டையிட்டு அந்த பத்திரத்தை பெற்றுக் கொண்டார் எனவும் தன்னை பழி வாங்குவதற்காகவே திட்டமிட்டு பொலிஸார் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் –

காலையில் மகன் பொலிஸ் நிலையம் சென்றும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தாது பொலிஸில் தடுத்து வைத்திருப்பதாகவும் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தொடர்ச்சியாக நீங்கள் போராட்டங்களுக்கு நிதிகளுக்காக செல்கின்றீர்கள் உங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து நிதி வருகின்றது என பல்வேறு வகைகளில் தன்னை தொடர்ச்சியாக அச்சுறுத்தி வந்தனர் எனவும் இன்றைய நிலையில் இவ்வாறு திட்டமிட்டு செய்திருக்கின்ற நிலைமையில் இவர்களுடைய இந்த செயற்பாடு தொடர்பில் அதிருப்தி வெளியிட்டதோடு தாங்கள் ஏதாவது தற்கொலை முயற்சிகள் செய்தால் கூட இவர்களுடைய அழுத்தங்களும் இவருடைய தாக்கத்தாலே தாங்கள் இந்த முடிவை எடுக்க நேரிடும் எனவும் எனவே சம்பந்தப்பட்ட மனித உரிமை சார்ந்த மற்றும் இலங்கையில் உள்ள தூதரகங்கள் அனைவரையும் இந்த விடயத்தில் உடனடியாக தொடர்பு கொண்டு தனக்கு நீதி பெற்று தர நடவடிக்கை எடுக்குமாறும் தன்னுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் முறைப்பாடு ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308


No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்




- கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் -

**1. உரலார் கேள்வி:-** உடல்நலம் அடைந்து சம்பந்தர் ஐயா 90 வயதைக் கடக்கிறாராமே?

**உலக்கையார் பதில்:-** ஐயாவுக்கு உலக்கையாரின் வாழ்த்துகள்! அவர் 100 வயதைக் கடந்தாலும்கூட மகிழ்ச்சிதான். அவரது உடல், நலமடைவது மட்டுமல்ல, நம் தமிழினமும் நலமடையவேண்டும்:. அவர் 90 வயதைக் கடப்பது மட்டுமல்ல, நம் இனமும் இதுவரை பட்டுவரும் இன்னல்களைக் கடக்கவேண்டும். இவைதான் முக்கியமான விடயங்கள். தலைமைப் பதவியில் இருந்தால் இவற்றைச் செய்யமுடியுமா? அப்பதவியை விட்டு இறங்கினால் இவற்றைச் செய்ய முடியுமா? என்பது பற்றி ஐயா இனிக் கட்டாயம் சிந்திக்கவேண்டும்:.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ ஆரும் பிடிச்சு இறக்கிறதுக்கு முன் அவரா இறங்கினால் நல்லதுங்கோ.**

**2. உரலார் கேள்வி:-** நீண்ட நாட்களின் பின் மீண்டும் யாழ்ப்பாணத்தில் கம்பன் விழா நடைபெறுவதால் மகிழ்கிறோம். உங்களுக்குப் பின்னும் நம் மண்ணில் இக் கம்பன் பணி தொடர்ந்து நடக்கும் என்று நினைக்கிறீர்களா?

**உலக்கையார் பதில்:-** நம்நாட்டில் நடைபெறும் தமிழ் விழாக்களில், கம்பன் விழா, முதன்மை விழா ஆகிவிட்டது. அது இறையருளே அன்றி வேறொன்றும் இல்லை. போர் தொடங்குவதற்கு முன்னரே தொடங்கிய கம்பன் விழாக்கள், கடும் போர்க் காலத்திலும் தொடர்ந்து நடந்து, இன்று போர் முடிந்த பிறகும் விடாமல் தொடர்வது, பெருமைக்குரிய விடயமேயாம். இது இறைவன் அருளால் நிகழ்ந்த, வேறெவரும் செய்யாத சாதனை என்றே நினைக்கிறேன். நாங்கள் மண்ணோடும் மக்களோடும் இணைந்திருந்ததால்த்தான் இச் சாதனையை நிகழ்த்த முடிந்தது. நீங்கள் தரும் ஆதரவே இவ் வெற்றிக்கான காரணம்.

கம்பன் விழா தேவைதானா? என்று சில அறிவிலிகள் அவ்வப்போது கேட்டு வருகிறார்கள். புலவர்களைப் போற்றினால்த்தான் மொழியும் இனமும் வளரும் என்று மகாகவி பாரதியார் சொன்னது அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. மன்னிப்போம்!

இனி உங்களது அடுத்த கேள்விக்கு வருகிறேன்.

எத்தனையோ இன்னல்களைத் தாண்டி, தூக்கிய காவடியை இறக்கி வைக்காமல் இறையருளால் இதுவரை ஆடி வருகிறேன். அவ்வப்போது சிலர் தோள்கொடுத்தும் செடில் பிடித்தும் என் ஆட்டத்திற்கு உதவி வந்தார்கள்! வருகிறார்கள்! இனி என்னாகும்? என்ற உங்கள் கேள்விக்கு நிச்சயமான பதில் எதையும் என்னால் சொல்ல முடியவில்லை.

சமூக வாழ்க்கை நோக்கித் தியாகம் செய்வோர் தொகை, வர வர இல்லை என்னும்படியாய்க் குறைந்து கொண்டே வருகிறது. இப்போதைக்கு என் ஆட்டம்; நின்றுவிடாமல் தோள்கொடுத்தும், செடில் பிடித்தும் என் மாணவர்களில் ஒருவரும், நண்பர்களில் ஒருவரும்; துணை செய்து வருகிறார்கள். அந்த இரண்டு சக்கரங்களில்த்தான் இப்போது கம்பன் கழகம் ஓடிக் கொண்டிருக்கிறது.

வடம் பிடிக்க இளைஞர்கள் சிலர் முன் வருகிறார்கள். அது மகிழ்ச்சிக்குரிய செய்தி. தேர் ஓட்டத்தில் தங்களுக்கும் பங்கிருப்பதாய்க் காட்ட, வேறுசிலர் கூட்டத்தோடு கூட்டமாய் நின்று அவ்வப்போது வடத்தைத் தொட்டுத் தொட்டு ஏமாற்றி மறைகிறார்கள். மறைய நினைக்கிறவர்களை நான் என்ன செய்யட்டும்? கம்பன் பணியையும் ஒரு இறைத்தொண்டென்றே நான் நினைக்கிறேன். தாங்குகிறவர்கள், இழுக்கிறவர்கள், தொட்டுச் செல்கிறவர்கள் என அனைவரும் அவரவர் உண்மைக்கேற்ப இறைவனிடம் பரிசு பெறுவார்கள்.

இறையருள் வாய்த்தால் இன்றைய நிலையில் கழகத்தைத் தாங்கி நிற்கும் அந்த இரண்டு சக்கரங்களும் உறுதிபட்டுக் காலங்கடந்து ஓடும் என்றும், உண்மையாய் வடம் பிடிப்போர் தொகை கூடும் என்றும் நம்புகிறேன். 'சாதனை செய்க பராசக்தி!'

**சல்லடையாரின் சலிப்பு ⁎ என்னத்தச் சொல்ல? உலகம் இப்படித்தானுங்கோ. உலக்கையாரிண்ட பதிலில ஒரு சலிப்புத் தெளிவாத் தெரியுது. ஏத்திவிட்ட ஏணிய இப்ப எவன் தான் நினைக்கிறான். எல்லாத்தையும் காலம்; கணிக்கும் பாருங்கோ. கம்பரதம் தொடர்ந்து ஓட சல்லடையாரும் பிரார்த்திக்கிறார்.**

**3. உரலார் கேள்வி:-** நம் தமிழ்த் தலைவர்களுக்கிடையில் உண்மையான ஒற்றுமை வரவே வராதா?

**உலக்கையார் பதில்:-** சூரியன் மேற்கே உதிக்கும் காலத்தில் வந்தாலும் வரலாம்!

**சல்லடையாரின் சலிப்பு ⁎ என்னத்தச் சொல்ல? அப்பவாவது வரும் எண்டு சொல்லாமல் வந்தாலும் வரும் என்று சொல்லுறாரே! இவர் பெரிய குசும்புக்காரர்தான்.**

**4. உரலார் கேள்வி:-** நீண்ட நாட்களின் பின்னரான உங்களது தமிழ்நாட்டுப் பயணம் எப்படி இருந்தது?

**உலக்கையார் பதில்:-** பொதுமக்களும், இலக்கிய ரசிகர்களும், பேச்சாளர்களும், அறிஞர்களும், அரசியல் தலைவர்களும் கொண்டாடித் தள்ளிவிட்டார்கள். இதற்குமேல் சொன்னால் அது தற்புகழ்ச்சியாகிவிடும். ஒன்றை மட்டும் சொல்லவேண்டும். தமிழ்நாட்டு மண்ணையும் மக்களையும் நான் சந்திக்காமல் இருந்திருந்தால், என் ஆற்றலுக்குரிய மரியாதை கிடைக்காத ஏக்கத்தில் இங்கு நான் ஒரு மனநோயாளியாகத்தான் மாறியிருப்பேன். அதற்காக நன்றியுடன் அத்திசை நோக்கி வணங்குகிறேன்.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ இங்க எவனுக்கு இவற்ற மதிப்புத் தெரியுதுங்கோ? வெளிநாட்டார் அவரை வணக்கம் செய்வதில் எங்களுக்கும் மகிழ்ச்சிதான்.**

**5. உரலார் கேள்வி:-** பதின்மூன்றைக் கொடுக்கக் கூடாதென்று சிங்கள அறிஞர் சிலர் மகாநாயக்கர்களைச் சந்தித்த செய்தியைப் பார்த்தீர்களா?

**உலக்கையார் பதில்:-** பார்த்தது மட்டுமல்லாமல் இந்நாட்டு பிரஜையாய் வெட்கித் தலைகுனிந்தேன். அறிவீனத்திற்கு ஒரு அளவேயில்லையா? மூன்று தசாப்தகாலமாய் நடந்த போர்ப் பாதிப்புக்களை மறந்த மூடர்களாய் அவர்கள் இயங்குகிறார்கள். புத்தரைக் காட்டிப் பகை வளர்க்க நினைக்கும் இவர்களைப் பார்த்து, புத்தரே கண்ணீர் வடிப்பார் என்பது மட்டும் நிச்சயம். இந்த நாட்டை வழிநடத்துவதாய்ச் சொல்லப்படும் மதிப்புக்குரிய மகாநாயக்க தேரர்கள், இப்புல்லர்களின் கோரிக்கையைப் புறந்தள்ளி இலங்கைத் தாயைக் காத்தருள முன்வருவார்கள் என நம்புவோம்.

**சல்லடையாரின் சலிப்பு ⁎ என்னத்தச் சொல்ல? அடிக்குமேல அடி விழுந்தும் அம்மி நகருகிற மாதிரித் தெரியேலைங்கோ. அம்மி உடைபிறத்துக்கு முதல் நகர்ந்திட்டா எல்லாருக்கும் நல்லதுங்கோ.**

**6. உரலார் கேள்வி :-** மனந்திறந்து வெளிப்படையாகச் சொல்லுங்கள். எங்கள் தமிழர்களை ஆள்பவர்கள் எவற்றையெல்லாம் செய்யவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

**உலக்கையார் பதில்:-** ஆளப்போகிறவர்கள் எந்தக் கட்சியினராக இருந்தாலும் அதுபற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால் அவர்கள் கீழ்க்கண்ட விடயங்களைக் கட்டாயம் கடைப்பிடிப்பவர்களாயும் நடைமுறைப் படுத்துகிறவர்களாயும் இருக்கவேண்டும். இதோ எனது அபிப்பிராயப் பட்டியல்.

⁎ அறத்தின் மீதும் தர்மத்தின் மீதும் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.

⁎ நம் தாய்த் தமிழின் மீது அசையாத பற்றுடையவர் களாய் இருக்கவேண்டும்.

⁎ தேசப்பற்றுடன் கூடிய இனப்பற்றுடையவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ தம் குடும்பத்தாரையும் வேற்றினக் கலப்பில்லாமல் வாழச் செய்பவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ நமது தமிழ்க் கலாசாரம், பண்பாடு ஆகியவற்றின் மீது அக்கறை கொண்டவர்களாய், அவற்றைத் தம் தனி வாழ்விலும் பேணுகிறவர்களாய், எக்காரணம் கொண்டும் தமிழரின் மொழி, கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை எவருக்கும் விட்டுக் கொடுக்காதவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ நமது தமிழ்மொழியில் ஓரளவாவது ஆட்சி பெற்றவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ நம் நாட்டிலுள்ள மும்மொழிகளிலும் எழுதவும் பேசவும் தெரிந்தவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ கட்டாயம் இறைநம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ நம் தமிழ் மூதாதையர்களின் எண்ணங்களின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ நம் மண்ணில் இருக்கும் மதங்களுக்கிடையில் வேற்றுமை காட்டாதவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ எல்லா மக்களின் எல்லா மத நம்பிக்கைக்கும் சமமான மரியாதை அளிப்பவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ எந்த இழப்பைச் சந்தித்தாலும் அதுபற்றிக் கவலைப்படாமல் மதுவினை நம் மண்ணை விட்டு முற்றாக ஒழிக்கவேண்டும்.

⁎ நம் பாரம்பரியச் சொத்துக்களான நதிகள், நீர்நிலைகள், ஆலயங்கள், நூல்கள், கலைச்சொத்துக்கள் முதலியவற்றின் அருமை தெரிந்து அவற்றைப் பேணத் தெரிந்தவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ நம் மண்ணில் வாழும் உயர் தமிழ்ப் புலமையாளர்களின் தரம் அறிந்து அவர்களைப் போற்றி உயரச் செய்கிறவர்களாய் இருக்கவேண்டும்.

⁎ நீதித்துறையிலும், காவல்துறையிலும் தலையீடு செய்யாமல் அத்துறைகளைச் சுதந்திரமாய் இயங்க விட்டு அவற்றில் எந்தவிதப் பிழையும் நேராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

⁎ வறுமை நீக்கத்திற்கும், கல்வி வளர்ச்சிக்கும், விவசாயத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் அன்றி, வேறெதற்கும் அரச செலவில் சலுகைகளைச் செய்தலாகாது.

⁎ தகுதியின் அடிப்படையில் மட்டுமே வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படுவதை உறுதிசெய்யவேண்டும்.

⁎ நம் பாரம்பரியக் கல்வியை உலகத் தரத்தோடு சமப்படுத்த ஆவன செய்யவேண்டும்.

⁎ மாணவர்களுக்குத் தாய்மொழியையும், அவரவர் சமயங்களையும் உயர் வகுப்புவரை கட்டாயப் பாடமாக்கவேண்டும்.

⁎ உணவுக்கு வழியற்றோரின் பட்டியல் தயாரிக்கப்பட்டு, மாவட்டம் தோறும் ஆடம்பரமற்ற பசிக்கான உணவு மட்டும் வழங்கும் கூடங்கள் அமைக்க வழி செய்ய வேண்டும்.

⁎ அதில் முதியோருக்கும், குழந்தைகளுக்கும் முதலிடம் வழங்கப்படவேண்டும்.

⁎ தவறிழைக்கும் தலைவர்களை மீள அழைத்துக்கொள்ளும் உரிமை கொண்ட தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்படவேண்டும்.

இப்படி இன்னும் எத்தனையோ சொல்லலாம். இதெல்லாம் நடக்கவா போகிறது? உங்களுக்கும் எனக்கும் வேலையில்லை என்று நகைக்கப் போகிறார்கள். அதனால் என்ன? கற்பனையிலாவது நல்லவற்றை நினைத்துவிட்டுப் போவோமே!

**சல்லடையாரின் சலிப்பு ⁎ உலக்கையாருக்கு விசருங்கோ இதையெல்லாம் செய்ய இனி ஒருத்தர் பிறந்து தான் வரவேணுமுங்கோ!**

காலைக்கதிர் Kalaikkathir

# “பிரபலமற்ற தீர்மானங்களை தொடர்ந்தும் எடுப்பேன்”

## நாடாளுமன்றத்தில் ரணில் அறிவிப்பு

(நேற்றைய காலைப்பதிப்பின் மிகுதி தொடர்ச்சி)

இப் பணியின் போது கென்யா, ஜேர்மனி மற்றும் நோர்வே நாட்டு அரசியல் கட்சிகள் தொடர்பான சட்டம், ஐக்கிய இராச்சியத்தின் வாக்காளர் சட்டம், அரசின் பொறுப்புக்கூறல் தொடர்பான ஐரோப்பிய முறைமை, ஐக்கிய இராச்சியத்தின் அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் கருத்துக் கணிப்புச் சட்டம் ஆகிய சட்டங்களை அடிப்படையாக கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்காலத்தை மிகவும் சிறந்ததாக மாற்றியமைப்பதற்காக புதிய நிறுவனங்கள், புதிய சட்டவிதிகள் மற்றும் பல புதிய கருத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வரலாறு தொடர்பான நிறுவனம், பொருளாதார விஞ்ஞானம் மற்றும் வியாபார நிறுவனங்கள், மகளிர் மட்டும் ஆண் பெண் பாலினம் தொடர்பான நிறுவனங்களை நாம் புதிதாக தாபிப்போம். அதேபோல் நான்கு புதிய பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்படும். அரச மற்றும் அரச கொள்கைகள் தொடர்பான பல்கலைக்கழகம், விவசாய தொழில்நுட்ப பல்கலைக்கழகம், காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் மற்றும் விளையாட்டுத் துறை பல்கலைக்கழகம்.

புதிய சட்ட விதிகள் மற்றும் சட்டங்கள் பலவற்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

* பெண்கள் தொடர்பான தேசிய ஆணைக்குழுச் சட்டம்
* ஆண் பெண் பாலின சமத்துவ சட்டம்
* பெண்களை வலுவூட்டும் சட்டம்
* சிறுவர் பாதுகாப்பு சட்டம்
* இளைஞர் நாடாளுமன்ற மறுசீரமைப்புச் சட்டம்
* போதைப்பொருள் தடுப்பு கட்டளையிடும் தலைமையகச் சட்டம்
* உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு
* பயங்கரவாத தடுப்பு மற்றும் தேசிய பாதுகாப்புச் சட்டம்

தற்போது நடைமுறைப்படுத்தப்படும் பிரசித்த நாட்டிய கட்டுப்பாட்டுச் சட்டம் இல்லாதொழிக்கப்படும். அரசமைப்பில் உள்ள கருத்து தெரிவிக்கும் உரிமையினை அடிப்படையாகக் கொண்டு கலைப் படைப்புக்களை வகைப்படுத்தும் சட்டம் தயாரிக்கப்படும்.

எமது நாடு காலநிலை மாற்றங்களுக்கு உட்படும் வலயத்தில் அமைந்துள்ளது. ஆகவே தான் நாம் காலநிலை மாற்றங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டும். அது தொடர்பில் உரிய முறையில் நடவடிக்கை மேற்கொண்டால் எமக்கு பசுமை ஒதுக்கீடுகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு காணப்படுகிறது.

அவை அனைத்தையும் கவனத்திற் கொண்டு நாம் இந்த சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

* காலநிலை மாற்றச் சட்டம்
* சமூக நீதிக்காக ஆணைக்குழுச் சட்டம்
* மீள் காடு வளர்ப்பு மற்றும் தாவர பாதுகாப்புச் சட்டம்
* உயிரோட்ட முறைமை சட்டம் – மகாவலி கங்கை, சிங்கராஜ வனம், சிவனொலிபாத பிரதேசம் மற்றும், வனச் சிகரம், ஹோட்டன் சமவெளி, நக்கில்ஸ், ஆதமின் பாலம் ஆகியன இச்சட்டத்தின் கீழ் கொண்டு வரப்படும்.
* கடல்வள ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவ சட்டம்.
* முத்துராஜவெல பாதுகாப்புச் சட்டம்.

பொருளாதாரம் தொடர்பாகவும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரச செலவு முகாமைத்துவத்துக்காக ஸீரோ பட்ஜட் அல்லது பூச்சியத்தை அடிப்படையாக கொண்ட வரவு செலவுச் செயன்முறை ஒன்று அறிமுகப்படுத்தப்படும்.

* வருமான அதிகாரச் சட்டம்
* வெளிநாட்டு கடன் முகாமைத்துவச் சட்டம்
* உணவுப் பாதுகாப்புச் சட்டம்
* அரச சொத்து முகாமைத்துவச் சட்டம்
* பொருளாதார ஸ்திரத்தன்மை சட்டம்
* தேசிய ஓய்வூதிய பங்களிப்புச் சட்டம்
* புதிய மதுவரிச் சட்டம்
* அந்நிய செலாவணிச் சட்ட திருத்தம்
* புன்வத் சட்டம்
* வெளிநாட்டு வியாபார மற்றும் முதலீட்டு சட்டம்
* டிஜிற்றல் தொழில்நுட்ப சட்டம்
* கறுவா அபிவிருத்தி திணைக்களச் சட்டம்
* பரஸ்பர இணக்கப்பாட்டின் கீழான விவாகரத்துச் சட்டம்

இவ்வாறான பொருளாதார சமூக மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்களை வெற்றியடையச் செய்ய வேண்டுமாயின் சரியான விடயங்களின் அடிப்படையில் மக்களுக்கு அறிவூட்டுதல் ஓர் அத்தியாவசியமான விடயமாக காணப்படுகிறது. சமூகத்தை அறிவூட்டும் பிரதான வகிபாகம் ஊடகத்துக்கு உரியதாகும்

அதற்காக ஊடகவியலாளர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச தரத்தில் பயிற்சி வழங்கப்படல் வேண்டும். 1993 இல் நான் பிரதமர் என்ற ரீதியில் ஊடக பயிற்சி நிறுவனம் ஒன்றை தாபித்தல் தொடர்பில் பரிந்துரை பெற்றுக்கொள்வதற்காக கலாநிதி காமினி கொரயா அவர்களின் தலைமையில் குழுவொன்றை நியமித்தேன். அந்த நிறுவனத்தை தாபிப்பதற்காக அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றபோதும் 1994 பொதுத் தேர்தல் காரணமாக அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாக ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச தரத்தில் பயிற்சி வழங்குவதற்காக ஊடக நிறுவனம் முதல் பல்கலைக்கழகம் வரையிலான நிறுவன முறைமை ஒன்றை தாபிப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த பல தசாப்த காலத்தை ஆராய்கின்ற போது ஊடகங்களின் வகிபாகம் உரியவாறு நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குறியாகவே காணப்படுகிறது. ஆகவே ஊடக மறுசீரமைப்பு எமது நாட்டுக்கு தேவையாக உள்ளது. இதன் போது சம்பிரதாய ஊடகம் மற்றும் சமூக ஊடகம் ஆகிய இரண்டு துறைகள் பற்றியும் நாம் கவனம் செலுத்துதல் வேண்டும். ஆகவே தான் ஊடகங்கள் தொடர்பிலும் தேசிய கொள்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

அரச மற்றும் ஊடக கைத்தொழில் ஆகியன ஒன்றிணைந்து கூட்டு சுய ஒழுங்குபடுத்தல் முறைமை ஒன்று பற்றி கவனம் செலுத்துவது முக்கியமானதென நான் கருதுகின்றேன். இணைய அவகாசத்தில் பொய்யான செய்திகள், வெறுப்பூட்டும் வெளியீடுகள், பிழையான தகவல்கள், சிறுவர் மற்றும் பெண்கள் துன்புறுத்தல்கள், தொந்தரவுகள் மாத்திரமன்றி மோசடிகள் மற்றும் ஊழல்களையும் நாம் அனுபவித்து வருகின்றோம். இது தொடர்பாக சமூக ஊடக வலையக் கம்பனிகள் உள்ளடங்கலாகத் தெட்டத் தெளிவான ஒழுங்குபடுத்தல் முறைமை ஒன்று தேவைப்படுவதாக நாம் கருதுகின்றோம்.

நாம் இங்கு கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான ஒரு விடயம் யாதெனில், கொள்கை தொடர்பான இணக்கப்பாட்டை ஏற்படுத்துவது ஆகும்.

அரசாங்கங்கள் மாறுகின்ற போது மாற்றமடையாத தேசிய கொள்கை. அமைச்சர்கள் மாற்றமடையும் போது மாற்றமடையாத தேசிய கொள்கை. உலகத்தின் அபிவிருத்தியடைந்த அனைத்து நாடுகளும் நிலையான கொள்கைகளின் ஊடாக முன்னோக்கிச் சென்ற நாடுகளாக காணப்படுகின்றன. காலத்துக்கு ஏற்றவாறு கொள்கைகள் இற்றைப்படுத்தப்படுகின்றன. ஆனாலும் அரசாங்கங்கள் மாற்றமடைகின்ற போது கொள்கைகள் தலைகீழாக மாற்றப்பட மாட்டாது.

இது முறைமை மாற்றத்துக்கான ஆரம்பம் மாத்திரம் ஆகும். மேலும் பல மாற்றங்களை நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இலங்கையர்களின், விசேடமாக இளைஞர் யுவதிகளின் கருத்துக்கு அமைய அந்த மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே எதிர்வரும் 25 ஆண்டுகளுக்குள் நாம் பின்பற்ற வேண்டிய கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பான முன்மொழிவுகளை முன்வைக்குமாறு நான் உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கின்றேன். அந்த கோரிக்கையினை இந்த சபையில் உள்ள உங்களிடம் மாத்திரம் நான் முன்வைக்கவில்லை. ஒட்டுமொத்த இலங்கையர்களிடத்திலும் முன்வைக்கின்றேன். நீங்கள் இலங்கையில் இருந்தாலும், வெளிநாடுகளில் இருந்தாலும் உங்களது கருத்துக்களை முன்வைக்கவும். நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் கூட்டு முயற்சியுடன் ஒன்றிணையுங்கள்.

இன்று இந்த நாட்டில் உள்ள பலருக்கு இன்று நாடு அடைந்துள்ள நீளம் – அகலம் – ஆழம் புரிவதில்லை. அது நாம் அனைவரும் வாழ்நாளில் இவ்வாறான ஓர் அபாயத்தை மற்றும் பாரதூரமான நெருக்கடிக்கு முகம் கொடுக்காமையினால் ஆகும். இந்த நெருக்கடியிலிருந்து விரைவாக மீளுவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டுனெ நான் மீண்டும் வலியுறுத்துகின்றேன். மதத் தலைவர்கள், அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள், அறிஞர்கள், தொழில் வாண்மையாளர்கள், தொழில் முயற்சியாளர்கள், வியாபாரிகள், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் போன்ற அனைத்து தரப்பினர்களும் ஒன்றாக இணைதல் வேண்டும். குறிப்பிட்ட சில காலம் ஒரே நோக்கத்தில் ஒரே கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான முடிவுகள் எட்டப்படல் வேண்டும். சமூக இணக்கப்பாடு ஏற்படுத்தப்படல் வேண்டும். நாட்டுக்காக நம் அனைவரதும் வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்தல் வேண்டும்.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட அனைத்துக் குழுக்களும் தற்போது தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். சுமைகளைத் தாங்குகின்றார்கள். இடர்களை எதிர் கொள்கின்றார்கள். ஆகவே நாம் பொருளாதாரத்தை மீண்டும் மேலுயர்த்திய பின்னர் கிடைக்கும் நன்மைகள் அனைத்தையும் அவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அவர்கள் பொருளாதார அபிவிருத்தியின் சிறந்த பெறுபேறுகளின் பங்குதாரர்களாக அமைதல் வேண்டும்.

இந்த சமூக நீதியை நடைமுறைப்படுத்துவதற்காக நாம் சமூக நீதிக்கான ஆணைக்குழுவை தாபிக்க எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான புதிய கொள்கைச் சட்டகத்தை இந்த சமூக இணக்கப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு உருவாக்குவோம்..

இறுதியாக எனக்கு மற்றுமொரு விடயத்தை ஞாபகப்படுத்த முடியும். அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான வேறுபாட்டினை நாம் புரிந்து கொள்வோம். இலங்கை அரசைப் பாதுகாப்பதற்கு நாம் அனைவரும் கட்டுபட்டுள்ளோம். தேர்தல்களின் போது ஜனநாயக ரீதியில் அரசாங்கங்களை மாற்றியமைக்கும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் உண்டு. ஆனாலும் இலங்கையை அராஜகமாக்கும் உரிமை ஒருவருக்கும் இல்லை. எந்தவொரு அரசியல் கட்சிக்கும் இல்லை. எந்தவொரு குழுவுக்கும் இல்லை.

எமது தாய்நாட்டை பொருளாதார அல்லது சமூக காலனித்துவமாக மாற்றுவதற்கு இடமளிக்க முடியாது. அராஜக நிலைக்கு இட்டுச்செல்ல இடமளிக்க முடியாது. நாட்டை உண்மையாக நேசிக்கும் எந்தவொரு நபரும் அதற்கு இடமளிக்க மாட்டார்கள். நாம் அனைவரும் நாட்டை நேசிக்கும் தரப்பில் இருக்க வேண்டுமே தவிர நாட்டை அராஜக நிலைக்கு இட்டுச்செல்லும் தரப்புடன் அல்ல.

கடந்த ஞாயிறு சன்டே டைம்ஸ் பத்திரிகையில் இளைஞர் யுவதிகள் சிலர் முன்வைத்த சில கருத்துக்கள்பற்றி நாம் இதற்கு முன்னர் கவனம் செலுத்தினோம். எனது உரையை நிறைவு செய்வதற்கு முன்னர் கிளிபேர்ட் பிரணாந்து முன்வைத்த மற்றுமொரு கருத்து தொடர்பில் நான் உங்களுடைய அவதானத்தைச் செலுத்த விரும்புகின்றேன்.

அரசியல் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்களென நான் எதிர்பார்க்கின்றேன். அவர்கள் தற்போது துரதிஷ்டவசமாக தோல்வியடைந்துள்ளார்கள். மக்கள் அவர்களைப் பின்பற்ற வேண்டுமென எதிர்பார்ப்பதாயின் அவர்கள் முன்மாதிரியாக செயற்படல் வேண்டும். நெகிழும் தன்மையுடைய இலங்கையர்களுக்கு தற்போதைய நெருக்கடியில் இருந்து மீளுவதற்கான தாங்கும் சக்தி உள்ளது. தலைவர்கள் அறிவுடையவர்களாக மற்றும் சுயபுத்தியுடன் தாம் கூறுகின்றவற்றை நடைமுறைப்படுத்தினால், தந்திரோபாய ரீதியாக இந்த சவால்மிக்க காலத்தை எம்மால் வெற்றிகொள்ள முடியும்.

நாட்டைப் பற்றி எதிர்பார்ப்புடன் உள்ள நாட்டை விட்டு வெளியேறுவதற்கு எண்ணியுள்ள இந்த மாணவ மாணவிகளின், இந்த இளைஞர் யுவதிகளின் எதிர்பார்ப்புக்களை வெற்றியடையச் செய்தல் இந்த சபையில் உள்ள நம் அனைவரதும் பொறுப்பு ஆகும்.

நீங்கள் அதற்குத் தயாரா?

இறந்தகால சிறைக் கைதிகளாக இல்லாமல் நாம் எதிர்காலம் பற்றிச் சிந்திப்போம். நாம் ஒன்றாக இணைவோம். பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருவோம். சனநாயக கருத்துக்கள் ஊடாக முன்னோக்கிச் செல்வோம். நாடு அடைந்துள்ள கவலைக்கிடமான நிலையில் இருந்து மீட்டெடுப்பதற்கு உயர்ந்தபட்ச ஒத்துழைப்பினை வழங்குவோம். அரசியல் நோக்கங்கள் பற்றி சிந்திக்க வேண்டுமாயின் நாட்டை இந்த நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்த பின்னர் அதுபற்றி சிந்திப்போம்.

கௌதம புத்த பெருமான் இவ்வாறு போதித்தார்.

நீங்கள் உங்களுக்கே விளக்காக இருங்கள்

அந்த அறிவுரையினை ஏற்றுக்கொண்டு நாம் எமக்கே விளக்காக இருப்போம்.

அப்போது தான் முழு நாட்டையும் வெளிச்சமாக்க முடியும்.

நன்றி.

காலைக்கதிர்
Kalaikkathir

# சிங்களவர் காலடியில் தமிழர்கள் இருக்கவேண்டும் இதனையா பௌத்தம் உங்களுக்குப் போதித்தது?

## மகாநாயக்க தேரர்களுக்கு சி.வி.விக்னேஸ்வரன் கடிதம்



தம்மைத்தாமே நிர்வகிப்பதற்குரிய சுதந்திரத்தை வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு வழங்காமல், அவர்களை சிங்களவர்களின் காலடியிலேயே வைத்திருக்க வேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்.

இதனைத்தான் பௌத்தம் உங்களுக்குப் போதித்ததா? வடக்கு – கிழக்குவாழ் தமிழர்கள் தனியாகப் பிரிந்து, தமது சொந்த 'தமிழீழத்தைக்' கட்டியெழுப்பிவிடுவார்கள் என்று அஞ்சுகின்றீர்கள்.

தமிழர்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டபூர்வ உரித்து சிங்களவர்களுக்கு இல்லை என்பதை அறிந்திருப்பதால்தான் இந்தப் பிளவு தொடர்பாக நீங்கள் கலங்குகின்றீர்களா? என்று தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் 4 பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், தமிழ்பேசும் மக்கள் சுமார் 3 ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்துவருகின்றனர். நான் கூறுவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், எமது புராதன வரலாற்றை உத்தியோகபூர்வமாக எழுதுவதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம், இந்திய வரலாற்றாசிரியர்கள் மற்றும் சர்வதேச வரலாற்றாசிரியர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருங்கள் என்றும் அவர் மகாநாயக்க தேரர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

மல்வத்துபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர், அமரபுரபீடத்தின் மகாநாயக்கர் தொடம்பான ஸ்ரீ சந்திரசிறி தேரர் மற்றும் ராமாஞ்ஞ பீடத்தின் மகாநாயக்கர் மல்குலாவே ஸ்ரீ விமலதேரர் ஆகியோர் அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தக்கூடாது என வலியுறுத்தி கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடிதமொன்றைக் கையளித்திருந்தனர்.

அந்தக் கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மேற்கோள்காட்டி, அவற்றுக்கு விளக்கமளித்து மேற்குறிப்பிட்ட 4 மகாநாயக்க தேரர்களுக்கும் அனுப்பிவைத்திருக்கும் கடிதத்திலேயே சி.வி.விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளார். அவரது 10 பக்கக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு –

இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர், 1940 களில் சிங்கள பௌத்தர்களுக்கும் தமிழ் இந்துக்களுக்கும் இடையில் வலுவான புரிந்துணர்வும், பரஸ்பர நம்பிக்கையும் மேலோங்கிக் காணப்பட்டது. அப்போதைய அநுராதபுர நகரில் அதிக எண்ணிக்கையான தமிழ்பேசும் மக்கள் வாழ்ந்தனர்.

குறிப்பாக உடரட்ட சிங்களவர்கள் டொனமூர் ஆணைக்குழுவின் ஆணையாளர்களிடம் சமஷ்டி ஆட்சிமுறையைக் கோரினர். அப்போதைய தமிழ்த் தலைவர்கள் 50:50 ஆட்சிமுறைமைக்குப் பதிலாக சமஷ்டி ஆட்சிமுறையைக் கோரியிருந்தால் நாம் சர்வ நிச்சயமாக சமஷ்டி அரசமைப்பொன்றைப் பெற்றிருப்போம்.

அண்மையில் நீங்கள் அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதம் தொடர்பில் சுட்டிக்காட்டுகின்றோம்.

அந்தக் கடிதத்தில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் மற்றும் மதரீதியான வணக்கஸ்தலங்களை நிர்வகிப்பதற்கான உரிமை உள்ளடங்கலாக காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்குவது பிரிவினைக்கு வழிவகுக்கும், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதன் விளைவாக தோன்றக்கூடிய ஸ்திரமற்ற தன்மையைக் கருத்திற்கொண்டு முன்னைய ஜனாதிபதிகள் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை, நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு ஜனாதிபதிக்கு உண்டு.

அவ்வாறிருக்கையில், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தக்கூடும், நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் பொருளாதார உதவிகளை வழங்குவதாகக்கூறி பலம்பொருந்திய நாடுகளால் முன்வைக்கப்படக்கூடிய நிபந்தனைகள் மற்றும் விருப்பங்களுக்கு அமைவாகச் செயற்படுவதை ஜனாதிபதி தவிர்க்கவேண்டும், ஜனாதிபதி தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்று நீங்கள் கூறியிருந்தீர்கள்.

மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கும் பட்சத்தில், அனைத்து மாகாணசபைகளும் பிரிவினையைக் கோரும் என்று நீங்கள் கூறுகின்றீர்களா? அவ்வாறு நடந்தால் என்ன? சுவிட்ஸர்லாந்தில் 20 உபபிரிவுகளே உள்ளன.

சுவிஸ்லாந்தைப்போன்று அனைத்து மாகாணங்களும் சுதந்திரமாகவும் தனித்தனியாகவும் செயற்படுவதற்கு அனுமதிக்கின்ற முறையை நாமும் கொண்டிருக்கலாம்.

சிங்களவர்களால் நிர்வகிக்கப்படும் மத்திய அரசாங்கத்தின்கீழ் இருப்பதில் தமிழர்கள் திருப்தியடையவில்லை என்றும், அதனால் தம்மைத்தாமே நிர்வகிப்பதற்குரிய சுதந்திரத்தை வடக்கு – கிழக்கு வாழ் தமிழ் மக்களுக்கு வழங்காமல், அவர்களை சிங்களவர்களின் காலடியிலேயே வைத்திருக்கவேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்.

அத்தகைய எண்ணம்தான் இந்த நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையைத் தோற்றுவித்ததல்லவா? இன்னும் எவ்வளவு காலம் இந்த நாடு தமிழர்களுக்கு எதிரான போருக்குத் தயாராகப்போகின்றது? அதனை முன்னிறுத்தி இராணுவத்தினரைத் தயார்நிலையில் வைப்பதற்காக வெளிநாட்டுக்கையிருப்பில் பெருந்தொகையை செலவிடப்போகின்றது? அதேபோன்று சிங்களவர்கள் எதற்காக அஞ்சுகின்றார்கள்? வடக்கு – கிழக்குவாழ் தமிழர்கள் தனியாகப் பிரிந்து, தமது சொந்த 'தமிழீழத்தைக்' கட்டியெழுப்பிவிடுவார்கள் என்று அஞ்சுகின்றார்களா? அது எவ்வாறு சிங்களவர்களைப் பாதிக்கும்? வடக்கு, கிழக்கில் பெரும் எண்ணிக்கையான சிங்களவர்கள் இல்லை.

அவ்வாறிருக்கையில், தமிழர்களைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டபூர்வ உரித்து சிங்களவர்களுக்கு இல்லை என்பதை அறிந்திருப்பதால்தான் நீங்கள் இந்தப் பிளவு தொடர்பாக கலங்குகின்றீர்களா? தமிழர்களை அடிபணியச்செய்வதற்கு (கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதற்கு) அவர்கள்மீது அழுத்தமும், வன்முறையும் பிரயோகிக்கப்படவேண்டும் என்று கருதுகின்றீர்கள் அல்லவா? இதனைத்தான் பௌத்தம் உங்களுக்குப்போதித்ததா? அஹிம்சை என்பது இந்து, பௌத்தம் மற்றும் சமணம் ஆகிய மதங்களின் மிகமுக்கிய ஆன்மீகக்கோட்பாடாகும்.

செயலால் மாத்திரமன்றி சொல்லாலும், சிந்தனையாலும் கூட எந்தவொரு உயிரினத்துக்கும் தீங்கு விளைவிக்கக்கூடாது என்பதே அதன் அர்த்தமாகும்.

அவ்வாறிருக்கையில் ஒருபகுதி மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய விடயத்தை தேரர்களால் எவ்வாறு போதிக்கமுடியும்? எம்முடைய ஒற்றையாட்சி அரசமைப்பின்கீழ் வடக்கு, கிழக்கிற்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிரிவினைக்கு வழிவகுக்காது.

அதேபோன்று முன்னைய ஜனாதிபதிகளின் தூரநோக்கற்ற செயற்பாடுகள் நாட்டில் சிவில் யுத்தமொன்று உருவாவதற்கான அடிப்படைகளைத் தோற்றுவித்ததல்லவா? இலங்கையில் 30 வருடகால யுத்தத்துக்குத் தூண்டுதலளித்த – 'தமிழர்கள் யுத்தத்தை விரும்பினால் யுத்தம் செய்யட்டும், அவர்கள் அமைதியை விரும்பினால் அமைதியை நாடட்டும்' என்ற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவின் கருத்து முட்டாள்தனமானது அல்லவா? அரசமைப்பிற்கான 13 ஆவது திருத்தம் எமது பிரச்சினைக்கான நிரந்தர தீர்வல்ல எனும் அடிப்படையில், முன்னைய ஜனாதிபதிகள் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தியிருந்தால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்கள் உருவாகியிருக்கும்.

ஆனால், 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தாமை தீவிர உறுதிப்பாடின்மையைத் தோற்றுவித்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் 30 வருடகால யுத்தத்தை விடவும் மிகமோசமான எதையேனும் தோற்றுவிக்கின்றதா என்று பார்ப்பதற்காகவேனும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தலாம் அல்லவா?

தமிழ்பேசும் மக்கள் சுமார் 3 ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்துவருகின்றனர்.

நான் கூறுவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளாவிட்டால், எமது புராதன வரலாற்றை உத்தியோகபூர்வமாக எழுதுவதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம், இந்திய வரலாற்றாசிரியர்கள் மற்றும் சர்வதேச வரலாற்றாசிரியர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோருங்கள் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



## றெஜினோல்ட் குரே ....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது. அவருக்கு எதிராகப் பலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர். அவர் கடுமையாக மனம் பாதிக்கப்பட்டு வீட்டுக்குச் சென்றார். அங்கே உயிரிழந்தார்.

உண்மையில் அவர் மரணிக்கவில்லை. கொலைசெய்துவிட்டார்கள். அதன் பின்தான் நாம் ஹெலிகொப்டர் கூட்ட ணியில் இருந்து விலகினோம் – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு, கிழக்கு, ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்காகும். இதற்காக நவீன தொழில் நுட்பத்தை உள்வாங்க வேண்டிய தேவை உள்ளது. வடக்கில் நெல் உற்பத்தியை மேற்கொண்டால் ஏனைய பகுதிகளில் ஏற்றுமதி சார் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பிற்பகல் வந்து சேர்ந்தார் ஜனாதிபதி. மாலையில் நகரில் உள்ள ரில்கோ விருந்தினர் விடுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்றார். அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். துறைசார் வல்லுநர்கள், கல்வியியலாளர்கள், வர்த்தக சங்கப் பிரநிதிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள், தொழில் முயற்சியாளர்கள் இந்தக் கலந்துரையாடலுக்காக அழைக்கப்பட்டிருந்தனர். யாழ்ப்பாணம் அபிவிருத்தியில் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பில் ஜனாதிபதியின் நேரடிக் கவனத்துக்குக் கொண்டுவரும் வகையில் ஜனாதிபதி செயலகத்தினால் இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், ஜனாதிபதியின் செயலாளர் சமன் எக்கநாயக்க, வட மாகாண பிரதம செயலாளர் பந்துசேன ஜனாதிபதியின் வட மகாண இணைப்பாளரும், மேலதிக செயலாளருமான இ.இளங்கோவன், யாழ். மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ். மாவட்ட மேலதிகச் செயலர் எம்..பிரதீபன் உட்பட அரச அதிகாரிகளும், பொலீஸ், இராணுவ அதிகாரிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

நாங்கள் குறுகிய காலத்துக்குள் முடிக்க வேண்டிய பிரச்சினைகள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவை தொடர்பில் நிதிப்பற்றாக்குறை இருக்கிறது. எதிர்காலத்தில் அவை பற்றிப் பேசித் தீர்மானம் எடுப்போம். இன்று நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலையில் இருந்து நாங்கள் மீண்டெழ வேண்டுமென்றால் பத்து வருடத்துக்கான அபிவிருத்தித் திட்டம் அவசியமானதாகும்..

நாங்கள் இது வரை பெற்ற கடன்களை மீளச் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வருடமும், இனி வரும் சில வருடங்களும் கடன்களைப் பெறவேண்டியிருக்கிறது. இந்தக் கடன்கள் எல்லாவற்றையும் அடைக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதேநேரத்தில் அந்நியச் செலவாணிக் கையிருப்பையும்பேண வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே ஒரு ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவது பற்றி நாங்கள் சிந்திக்கிறோம்.

மிகவும் போட்டித் தன்மை மிக்க ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது. நாங்கள் இதற்கென சில மாகாணங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த மாகாணங்களில் வடக்கு மாகாணமும் ஒன்று. இந்த விடயங்களை நாம் முன்னெடுத்து வரும் போது வடக்கின் பொருளாதாரம் மிகவும் உயர்ந்த நிலையை அடையும். வடக்கு, வட மத்தி மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே நாங்கள் அபிவிருத்தி சார்ந்து மிக முக்கிய கவனம் செலுத்துகிறோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த மட்டில் அடுத்து வரும் பத்தாண்டுகளுக்குள். உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தையும், கடற்றொழிலையும் மேம்படுத்துவதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம் . இந்திய மீனவர்களால் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் இழுவை மடிப் படகுப் பிரச்சினைக்கும் அமைச்சர்களுடன் கலந்துரையாடி விரைவில் தீர்வைப் பெற்றுத் தர இருக்கிறோம். வடக்கு மாகாணத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்கு மல்வத்து ஓயாவில் இருந்து நீரைக் கொண்டு வருவதற்கான திட்டமொன்றையும் நாங்கள் வைத்திருக்கிறோம். அத்துடன் ஆனையிறவு களப்புப் பகுதியில் உவர் நீரை நன்னீராக்கும் திட்டம் ஒன்றும் உள்ளது. பூநகரி குளத்தையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

திருகோணமலையில் இருந்து மன்னார் வரை சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும், வடக்கிலுள்ள இந்து ஆலயங்களுக்கு இந்தியாவிலிருந்தும், மலேசியாவிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கும், புதிய ஹோட்டல்களை அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம். மாற்று வலு மின் உற்பத்தித் திட்டங்களும் இருக்கின்றன. அத்துடன் கடற்பகுதியில் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் உயிர்வாயு உற்பத்தி பற்றியும் ஆராய்ந்து வருகிறோம். இதன் மூலம் நாட்டிலுள்ள பசுமை சக்தி உற்பத்தித் தேவைக்கு வடக்கு மாகாணம் பங்களிக்கும் என்றார்.

விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் உரத் தட்டுப்பாடு தொடர்பில் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டிய போது இம்முறை உரத்துக்கான மானியம் நெற்செய்கைக்காக மட்டுமே வழங்கப்பட்டது. வெளிநாடு ஒன்றின் உதவித் திட்டத்தின் கீழ் அது கிடைத்தது. ஏனைய பயிர்களுக்கான உர மானியம் பற்றி – அதனை எங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றி ஆராய்ந்து வருகிறோம் எனறார் ஜனாதிபதி.

புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு வருகின்றபோது, அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதில் மிக நீண்ட கால தாமதம் ஏற்படுகிறது. இந்தத் தாமதம் நீக்கப்படவேண்டும். முதலீட்டாளர்களைப் பொறுத்த வரை குறுகிய காலத்துக்குள் நடைமுறைப்படுத்துவதையே விரும்புகிறோம் என்று முதலீட்டாளர் ஒருவர் குறிப்பிட்டார். அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, இலங்கையில் முதலீடு செய்யவிரும்பும் வெளிநாட்டில் வதியும் இலங்கையர்களுக்கென நாங்கள் புலம்பெயர்ந்தோருக்கான முதலீட்டு அலுவலகங்களைத் திறந்துள்ளோம். அவ் அலுவலகம் முதலீட்டாளர்களின் சகல தேவைகளையும் மூன்று மாத காலத்துக்குள் பூர்த்தி செய்து தரும். அரச அலுவலகங்களில் இருக்கும் நடைமுறைத் தாமதங்கள் பற்றி நீங்கள் அறிவீர்கள். இவற்றை விரைவுபடுத்த முயற்சி செய்வோம் என்றார்.

அத்துடன் அமைய அடிப்படையில் பணியாற்றும் சிற்றூழியர்களுக்கான நிரந்தர நியமனம், திக்கம் வடிசாலைப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், வீதி புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு தரப்பினரும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

## பாகிஸ்தான் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.

நட்பு நாடுகள் என்ற வகையில் இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலுள்ள நீண்டகால நெருங்கிய உறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா உள்ளிட்ட குழுவினருடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டார்.

இந்தச் சந்திப்பைக் குறிக்கும் வகையில் ஜெனரல் சாஹிர் ஷம்ஷாத் மிர்ஸா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா மற்றும் பாகிஸ்தான் கடற்படையின் ரியர் அட்மிரல் அப்துல் பாஸித் பட் உள்ளிட்ட பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## போதைப் பயன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதியில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

200 பேர் வரையில் கலந்துகொண்ட இச்சந்திப்பில் கலந்துகொண்ட பொருளாதார நிபுணரான செல்வின், வடக்கில் உள்ள உத்தியோகத்தர்களின் பணியில் அமைப்பு நிலை மாற்றம் தேவையாகவுள்ளது என்று சுட்டிக்காட்டினார். கிராமங்களில் உள்ள நிறுவனங்களைப் பயன்படுத்த வாய்பளிக்கவேண்டும், கிராமங்களில் புதிய நிறுவனங்களை உருவாக்கிதொழில்வாய்ப்பைஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இவற்றைக் கவனமாக செய்வோம் என்று ஜனாதிபதி பதிலளித்தார். இதே நேரம், ஆனையிறவு உப்பளம், பலாலி விமான நிலையம், காங்கேசன் துறை முகம் போன்றவற்றை அபிவிருத்தி செய்வோம் எனவும் அவர் பதிலளித்தார்.

இதேநேரம் விவசாயிகள் சார்பில் பங்குகொண்ட பிரதிநிதிகள் தென்னிலங்கையில் நெற் பயிர் அழிவு ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு வழங்கப்படுகின்றது. அதேபோன்று இங்கே எமது விவசாயிகளின் தோட்டச் செய்கை அழியும்போது அதற்கும் இழப்பீடு வேண்டும் எனக் கோரிக்கை முன் வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்ப்பாணத்தை ஓர் தகவல் தொழில் நுட்ப மாவட்டமாக மாற்றவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார். தமிழ்நாடு மற்றும் யாழ்ப்பாணத்திற்கு இடையிலான போக்குவரத்தை மேலும் இலகுபடுத்துவதன. மூலம் பொருளாதாரத்தை வளர்த்துக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது பதிலளித்த ஜனாதிபதி விரைவில் பூநகரியை ஓர் நகரமாக வளர்த்தெடுக்க எண்ணுகின்றோம். அதேபோல் பாலியாறு, பறங்கியாறு திட்டங்களைத் தொடங்கவும் திட்டமிடப்படுகின்றது. இவை அனைத்திற்கும் மேலாக மன்னார் ஊடாக இந்தியாவிற்கான போக்குவரத்தை தொடங்கக் கூடிய முன்னேற்பாடுகளை ஆராய்கின்றோம் என்றார்.

## தேர்தலை அரசு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளை, மக்கள் இறையாண்மையை மக்கள் பலத்தின் ஊடாக வென்றெடுப்போம்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஹப்புத்தளையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகலவற்றினதும் விலைகளும் உயர்ந்துள்ள இந்நேரத்தில், வட்டி விகிதங்கள் அதிகரித்து, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்கூட ஆதரவற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் இந்நேரத்தில் இருள் சூழ்ந்த தாய்நாட்டை மீட்க ஒன்றிணையுமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன்.

வங்குரோத்து நிலையில் உள்ள நாட்டை மீட்டு மீண்டும் 220 இலட்சம் மக்களும் பொருளாதார நன்மைகளை அனுபவிக்கும் நாட்டை உருவாக்குவேன்.

மக்கள் துயரத்தில் இருக்கும் நேரத்தில், மனச்சாட்சியற்ற யானை – காக்கை – மொட்டு அரசு சுகபோகங்களை அனுபவித்து வருகின்றது.

அதனை விரட்டியடித்து அபிவிருத்தியை மையமாகக் கொண்ட பிரேமதாஸ அபிவிருத்தி யுகத்தை உருவாக்க ஒன்றிணையுமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## இந்தியக் குழுவினர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கு.அண்ணாமலை ஆகியோர் மன்னார் மாவட்டத்திற்குச் சென்று பல் இடங்களையும் பார்வையிட்டனர். புகழ்பெற்ற சிவத் தலமான திருக்கேதீச்சரத்திலும் அவர்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

தலைமன்னார் பகுதிக்கும் சென்று இராமேஸ்வரத்துடன் அங்கிருந்து கப்பல் போக்குவரத்து நடத்துவதற்கான ஏதுநிலை குறித்தும் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது..

இவர்களுடன் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் ராஜேஷ் நட்ராஜ் ஜெய பாஸ்கர், ஆகியோரும் இணைந்திருந்தனர்.

தலைமன்னார் கடற்படை முகாம் பகுதிக்குச்சென்று பார்வையிட்ட பின்னர் இந்தியக் குழுவினர் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாட்டில் ஈடுபட்டனர். இந்திய அரசின் நிதி உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட ஆலய கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டனர். ஆலய நிர்வாகத்தினருடனும் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து இலங்கை – இந்தியா நட்புறவு நாடுகளின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

மன்னார் செல்வதற்கு முன்னதாக யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்குச் சென்ற குழுவினர் அங்கு வைக்கப்பட்டுள்ள இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் உருவச்சிலைக்கு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

## யாழ். மத்திய பஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைக் கட்டளை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன்வைத்த விண்ணப்பத்துக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் இந்தத் தடை உத்தரவை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் இன்று மாலை 5 மணியளவில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கின்றார்.

இந்த நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாகப் போராட்டம் நடத்தத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருந்தது.

இந்தநிலையில் இந்தப் போராட்டத்துக்கு தடை உத்தரவு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் நேற்று விண்ணப்பம் செய்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி க.சுகாஷ் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்தத் தடை உத்தரவு கோரப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் பொலிஸாரின் விண்ணப்பத்தை முகத்தோற்றளவில் ஏற்று தடைக் கட்டளையை வழங்கினார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 27 வெள்ளிக்கிழமை 10.02.2023 கதிர் 345

## வெல்லவாயவில் நில அதிர்வு

ஊவா மாகாணத்தின் புத்தளை வெல்லவாய பகுதியில் சிறியளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. ரிச்டர் அளவு கோலில் அது 3 புள்ளியாகப் பதிவாகியுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நில அதிர்வால் எந்தப் பாதிப்பும் இல்லை என்றும் மக்கள் அச்சப்படவேண்டியதில்லை என பேரிடர் முகாமைத்துவ நிலையம் கேட்டுக்கொண்டுள்ளது.

# தேர்தலை இடைநிறுத்தக் கோருகின்ற மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

### பெப்ரவரி 23 ஆம் திகதி தீர்ப்புக்காகப் பலரும் காத்திருப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் இடைநிறுத்தி உத்தரவிடுமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தர தாக்கல் செய்த எழுத்தாணை மனு மீதான விசாரணை எதிர் வரும் 23 ஆம் திகதி வரை உயர் நீதிமன்றத்தால் இன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில் உயர் நீதிமன்றத்தில் இன்று ஆஜராகிய ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் குறித்த மனு தொடர்பில் அடிப்படை ஆட்சேபனைகளை முன்வைத்தார். 2

## தேர்தலை நடத்த நீதிமன்ற உத்தரவு அவசியமில்லை

### உயர் நீதிமன்றம் இன்று கருத்து; வழக்கையும் முடித்தது

உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் திட்டமிட்டபடி எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடத்துவதற்குத் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட வேண்டிய அவசியம் இல்லை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதன் மூலம் திட்டமிட்டபடி தேர்தலை நடத்துவதற்கான தடை ஏதும் தேர்தல்கள் ஆணைக் குழுவிற்கு இல்லை. 2

## ரணிலின் சுதந்திர தின நிகழ்வை புறக்கணிக்கும் தமிழ்க் கட்சிகள்!

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில்நாளைமாலைஇடம்பெறவுள்ள சுதந்திர நாள் நிகழ்வை இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் புறக்கணிக்கவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்ட நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நாளை மாலை இடம்பெறவுள்ளன. இதில் கலந்துகொள்ளுமாறுவடக்கைச்சேர்ந்தஅனைத்து தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

இதில் இலங் கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் மற்றும் தமிழ்த் தேசிய மக் கள் முன்னணி ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சி.வி.விக் னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நிலைப்பாடு இதுவரை தெரியவரவில்லை.

## யாழ். நிகழ்வுகளில் ஜனாதிபதி, பிரதமர்

### இந்திய அமைச்சரும் பங்கேற்பு

'யாழ்ப்பாண கலாசார மையம்' கையளிப்பு, இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வுகள் என்பன நாளை சனிக்கிழமை மூன்று கட்டங்களாக நடைபெறவுள்ளது. இவற்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

காலை 9 மணிக்கு யாழ்ப்பாண கலாசார மையம் கையளிப்பு நடைபெறும். இந்த நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் இந்திய மத்திய இணை அமைச்சர் எல்.முருகனும் கலந்துகொள்ளவுள்ளார். அவருடன் பாரதிய ஜனதாக்கட்சியின்தமிழகத்தலைவர் அண்ணாமலையும் பங்கேற்கவுள்ளார்.

இதன் பின்னர் மாலை 5 மணிக்கு இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் கலாசார மையத்தில் நடைபெறும். இதன்போது வடக்கின் 5 மாவட்டங்களையும்பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சுதந்திர நாள் ஊர்த்திப் பவனி நடைபெறும். 2

## சுதந்திரதின யாழ் கொண்டாட்டங்களை எதிர்த்து குடாநாட்டில் நாளை போராட்டம்

நாளை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ள இலங்கையின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்தப் போவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் அறிவித்துள்ளன.

கொக்குவிலில் உள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில்செய்தியாளர்களைச் சந்தித்த கட்சியின் ஊடகப் பேச்சாளர் க.சுகாஸ் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு தமிழ் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் மத்தியபேருந்துநிலையத்துக்குமுன்பாக போராட்டம் இடம்பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாளைய தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறார்கள் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இன்று அறிவித்தது. தமிழ் மக்க ளினுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு இதுவரை காலமும் தீர்வு வழங்கப்படாத நிலையிலும் பொருளாதார பின்னடைவு நேரத்தில் சுதந்திர தின விழா கொண்டாட்டம் இரண்டாவது தடவையாக தேவையில்லை என்று மாணவர்கள் தெரி வித்தனர். தமது கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறுஅனைத்துதரப்பினருக்கும் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கேட்போர் கூடத்தில் இன்று பிற்பகல் 3 மணியளவில் செய்தியாளர்களைச் சந்தித்த மாண வர்கள் போராட்டம் தொடர்பான அறிவிப்பை விடுத்தனர்.

நாளைய தினம் நண்பகல் 12 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்றலில் 2

## '13' குறித்து விளக்கமின்மையாலேயே வீதிகளில் இறங்கியுள்ளனர் தேரர்கள்

### நாடு மீண்டெழ அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியம் என்றும் மனோ வலியுறுத்து

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தெளிவில்லாத காரணத்தாலேயே பௌத்த தேரர்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டதுக்கு எதிராகப் பௌத்த தேரர்கள் தற்போது வீதிகளில் இறங் கியுள்ளனர். உண்மையில்இந்தச்சட்டத்தில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் தெளிவில்லாத காரணத்தாலேயே பௌத்த தேரர்கள் வீதிகளில் இறங்கியுள்ளனர். 2



## திருக்கோணேச்சர தலத்தை இந்தியா பொறுப்பெடுத்து பாதுகாக்கவேண்டும் 2

### ஆறு திருமுருகன் இன்று கோரிக்கை



இலங்கையின் புகழ்பெற்ற சைவத் திருத்தலங்களில் ஒன்றான திருக்கோணேச்சரத்தை இந்தியா பொறுப்பெடுத்து அதனைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் இந்து மா மன்றத்தின் உப தலைவரும் தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தின் தலைவருமான ஆறு. திருமுருகன்.

இந்திய மத்திய தகவல் ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை இணை அமைச்சர் கலாநிதி எல்.முருகன் திருக்கேதீச்சரத்துக்குச் சென்றிருந்த இன்றைய தினம் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் இந்தியத் துணைத் தூதுவராலயம் அமைக்கப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார் ஆறு திருமுருகன், அப்போது அவர் தெரிவித்ததாவது:

இந்துக்களின் புனித இடமாகக் காணப்படுகின்ற திருக்கோணேஸ்வரம் இன்னும் கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள்ளும் தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலும் இருப்பதனால் திருக்கோணேஸ்வர ஆலயத்தை சுதந்திரத்தை பரிபாலனம் செய்ய முடியாதுள்ளது. திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணியை இந்திய அரசு பொறுப்பேற்று செய்தது போல திருக் கோணேஸ்வர ஆலய திருப்பணியும் பெறுப்பேற்றுச் செய்து தரவேண்டும்.

இது தொடர்பாக நாங்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம் இந்திய உயர் ஆணையர் திருக்கோணேஸ்வரம் சென்று எல்லாவற்றையும் பார்வையிட்டு செல்கின்றார் ஆலயத்திற்கு சமீபமாக தற்போது முறையற்ற வகையில தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டவர்களால் பெட்டிக் கடைகள் அமைக்கப்பட்டு கோவில் பாதைகள் ஆக்கிரமிக்கப்பட்டு அவர்கள் நிரந்தரக் கடைகள் அமைப்பதற்கு 2

## நெல்லுக்கு உத்தரவாத விலை கேட்டு வவுனியா விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

### ரூ. 100க்கு குறையாமல் வழங்கப்படும் என்று உறுதிமொழி



பெரும்போகஅறுவடைநெல்லுக்கு உத்தரவாத விலையை வழங் குமாறு கோரிவவுனியா, ஓமந்தைவிவசாயிகள் இன்று ஆர்ப்பாட்டம் மற்றும் ஊர்வலம் நடத்தினர். இதையடுத்து கிலோவிற்கு 100ரூபாவிற்குக்குறையாதஉத்தரவாத விலையை அரச வழங்கும் என்று வவுனியா மாவட்டச் செயலர் 2

## ‘13’ குறித்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டை எவரும் இனி தீவைத்துக் கொளுத்த முடியாது. நாட்டைப் பின்னகர்த்த முடியாது. வீதிகளில் இறங்கியுள்ள தேரர்களுக்கு ம காநாயக்க தேரர்கள் வழிகாட்டவேண்டும்; அவர்களுக்கு உண்மையைத் தெளிவுபடுத்த வேண்டும். இது தொடர்பில் எமது சக நாடாளு மன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவும் கவனம் செலுத்தவேண்டும்.

நாடு அதளபாதாளத்தில் இருந்து மீண்டெழ வேண்டுமெனில் அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியமானது – தேவையானது.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது புதிய தொரு சட்டம் அல்ல. இது ரணில் கொண்டு வருகின்ற சட்டம் அல்ல; சஜித் கொண்டு வருகின்ற சட்டம் அல்ல; அநுரகுமார கொண்டு வருகின்ற சட்டம் அல்ல. இந்தச் சட்டம் ஏற்கனவே எமது நாடாளுமன்றத்தின் அனுமதி பெறப்பட்டு நாட்டின் அரசமைப்பில் இருக்கின்ற சட்டமாகும். இது புதியதொரு சட்டம் அல்ல.

எனவே, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழு மையாக நடைமுறைப்படுத்தி தேசிய பிரச் சினைக்குத் தீர்வு காண வேண்டும் –என்றார்.

## தேர்தலை நடத்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டதிட்டங்களின்படி தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தேர் தலை நடத்த அறிவித்தல் விடுத்து தேவை யான நடவடிக்கைகளை எடுத்த நிலையில் அதனை நடத்துவதற்கான எழுத்தாணையை வழங்கவேண்டிய அவசியம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவித்திருக்கிறது உயர் நீதிமன்றம்.

மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கடமைப் பட்டுள்ளது என்றும் உயர் நீதிமன்றம் தனது அவதானிப்பை

வெளிப்படுத்தியது. உயர் நீதிமன்ற நீதி யரசர்கள் எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி.நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இன்று இந்த முடிவை அறிவித்தது. அத்துடன் இந்த மனுக்களைத் தொடர்ந்து விசாரிப்பதில்லை என்ற முடிவுக்கும் வந்தது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவ தற்கு உயர் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கும ாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, லக்ஸ்மன் கிரியெல்ல, அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகி யோரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதே நீதிமன்றம் தனது முடிவை அறிவித்தது.

இந்த மனுவில் சட்டத்தரணி சுனில் வட்டகல, எரங்க குணசேகர மற்றும் வி.சந்திரசேகரன் ஆகியோர் இடை மனுதாரர்களாகச் சேர்ந்தி ருந்தனர்.

## யாழ்.நிகழ்வு.....

இறுதியாக இரவு 7 மணிக்கு முற்றவெளியில் இசை நிகழ்வு நடைபெறும்.

இந்த இரு நிகழ்வுகளும் ஜனாதிபதி செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## நெல்லுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவசாயி களிடம் தெரிவித்தார். வவுனியா, தாண்டிகுளம் விவசாயக் கல்லூரிக்கு முன்பாகத் தொடங்கிய ஊர்வலம் ஏ–9 வீதி ஊடாக வவுனியா மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவ சாயிகள் “பயிர் அழிவிற்கான நட்ட ஈட்டினை வழங்கு”, “விவசாயிகளின் நாளைய எதிர்காலத்திற்கு வழியை ஏற்படுத்துங்கள்”, “நெல்லிற்கான உத்தரவாத விலையை வழங்கு” என எழுதப்பட்ட பதாதைகளைத் தாங்கியிருந்தனர். வவுனியா மாவட்ட செயலக வாயிலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகளின் பிரிதிநிதிகள் சிலர் மாவட்டச் செயலர் பீ.ஏ.சரத்சந்திரவிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர். விவசாயி களின் அவல நிலை தொடர்பில் அவருக்கு விளக்கினர்.

இதனையடுத்து மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர இது குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்றார், ஒரு கிலோவிற்கு 100 ரூபாய்க்கு குறையாத வகையில் உத்தரவாத விலையை அரசு உடனடியாக வர்த்தமானி மூலம் வெளியிடும் என்றும் மாவட்டச் செயலர் விவசாயிகளுக்கு உறுதியளித்தார்.

இலங்கையின் புகழ்பெற்ற சைவத் திருத் தலங்களில் ஒன்றான திருக்கேதீச்சரத்தை இந்தியா பொறுப்பெடுத்து அதனைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் இந்து மா மன்றத்தின் உப தலைவரும்

கிழக்கு மாகாணத்தில் இந்தியத்துணைத் தூதுவராலயம் அமைக்கப்படவேண்டும் எனக்கோரிகை முன்வைத்துள்ள அகில இலங்கை இந்து மா மன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் திருக்கோணேஸ்வரம் இந்திய அரசாங்கம் பொறுப்பேற்று அதனைப் பாதுகாக்க நடவடிக்கை வேண்டும் என வேண்டு கோள் விடுத்தார்.

## சுதந்திரதின......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாண வர்களும் பொதுமக்களும் இணைந்து இந்த கவ னவீர்ப்புப் போராட்டத்தை நடத்துவர் என்று மாணவர்கள் அறிவித்தனர்.

## திருக்கோணேச்சர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் எடுக்கப்படுவதையும் இலங்கை ஜனாதிபதிக்கும் இந்தியப் பிரமருக்கும் நாம் அறிவித்திருந்தோம். இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதாக வாக்குறுதிகள் வழங்கப் பட்டிருந்தபோதும் இதுவரை நிரந்தர மான தீர்வு காணப்படவில்லை. மிக நீண்ட வரலாறு கொண்ட திருக்கோணேஸ்வர திருத் தலத்தை பாதுகாப்பதற்கு அனைவரும் முயற்சி எடுக்கவேண்டும் குறிப்பாக இந்திய அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். கிழக்கு மாகாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் அமைக்கப்படவேண்டும் என பலதரப்பினராலும் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டு வரும் நிலையில் இதுவரை அமைக்கப்படவில்லை. கிழக்கு மாகாணத் தைச் சேர்ந்த மக்கள் இந்தி யாவிற்கு தல யாத்திரை செல்வது என்றாலோ மருத்துவத்தேவைகளுக்குச் செல்வதென்றாலோ உயர் கல்விக்காக இந்தியா செல்வதென்றாலோ பயண அனுமதிகளைப் பெற்றுக்கொள்ள கொழும்புக்கே செல்லவேண்டியுள்ளது. இதனால் பல துன்பங்களை அனுபவித்து வரு கின்றார்கள்.

எனவே இந்திய துணைத்தூது வரா லயம் கிழக்கு மாகாணத்தில் அமையவேண்டும் இதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று கிழக்கு மக்கள் சார் பாக வேண்டிக்கொள்கின்றோம் – என்றார்.

## தேர்தலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்தாணை மனுவில் மனு தாரர்கள் தொடர்பில் உரிய விடயங்கள் சம ர்ப்பிக்கப்படவில்லை என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உயர் நீதிமன்றத் துக்கு அறிவித்தார். மனுதாரர் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வாக்காளரா என்பது தொடர்பிலும் மனுவில் தெரிவிக்கப்படவில் லை என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய, குறித்த எழுத்தாணை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாது தள்ளுபடி செய்யுமாறு ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது, நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரில் புள்ளே ம ன்றில் ஆஜராகி விடயங்களைச் சமர்ப்பித்தார். நாடு பொருளாதார நெருக்கடியை எதிர் நோக்கியுள்ள சூழ்நிலையில், அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவை தீர்மானம் எடுத் துள்ளது என நிதி அமைச்சின் செயலாளரால் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக்கடதாசியில் தெரி விக்கப்பட் டுள்ளது என்று மேலதிக சொலி சிட்டர் ஜெனரல் நெரில் புள்ளே ம ன்றுக்கு அறிவித் தார். இந்நிலையில், குறித்த எழுத் தாணை மனு மீதான பரிசீலனையை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ஒத்திவைப் பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

076 443 8622




40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்

douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஒரு பெயரைக் கல்லில் பதிப்பிக்க பிச்சையெடுக்கவேண்டியிருக்கிறது

இலங்கையில் கடந்த 4 தசாப்தங்களாக அதிகாரப் பகிர்வு, அதிகாரப் பரவலாக்கம் பற்றித் தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றது. தமிழர்கள் அதிகாரத்தைப் பகிர்ந்தளியுங்கள் என்று கேட்டால், அதனால் பிரச்சினையைத் தீர்க்க முடியாது; பதிலாக அதிகாரங்களை உள்ளூராடசி மன்றங்கள் வரையில் பகிர்ந்தளிப்பதன் மூலமே பிரச்சினைக்கு நிரந்தமாகத் தீர்வு காணலாம் என்று கூறுவதை தெற்கு அரசியல்வாதிகள் வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முன்னாள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனகூட மாவட்ட சபைகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அதிகாரப் பகிர்வு மற்றும் பரவலாக்கம் தொடர்பில் இவ்வாறு மிக நீண்ட உரையாடல்கள், கருத்துப்பரிமாற்றங்கள்நடந்திருக்கின்றன. இருப்பினும்அதன்புரிந்துணர்வு என்ன எந்த மட்டத்தில் இங்கு இருக்கின்றது, இது விடயத்தில் தமிழ், சிங்கள அரசியல்வாதிகள் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதற்கான உதாரணமாக நிமிர்ந்து நிற்கின்றது நாளை யாழ்ப்பாண மக்களுக்கு உரித் தாக்கப்படவுள்ள யாழ்ப்பாண கலாசார நிலையம்.

இந்திய மக்களின் பணத்தில் புதுடில்லியால் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடம் பணிகள் நிறைவுபெற்று பல வருடங்களின் பின்னர், பலத்த இழுபறிகளைத் தொடர்ந்து இப்போதுதான் மக்கள் பயன்பாட்டுக்காக முழுமையாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. இந்தக் கட்டடம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்குச்சொந்தமானநிலத்தில்எழுப்பப்பட்டுள்ளது. மாநகர சபையின் சொத்தாக்கப்படும் என்கிற ஒப்பந்தத்தின் கீழ்தான் இந்த இடத்தில் கலாசார நிலையத்தை எழுப்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இருப்பினும், இவ்வளவு பெரிய கட்டடத்தை, வசதி வாய்ப்பை முகாமை செய்யும் நிதி வசதி, வளம் யாழ்ப்பாண மாநகர சபையிடம் இல்லை. தொடர்ச்சியான போரால் செயற்பாட்டை இழந்திருந்த மாநகர சபையிடம் இவ்வளவு பெரிய கட்டடத் தொகுதியைப் பேணிப் பராமரிக்கும் திறன் இல்லை என்பதை அடுத்து, அதனை நிர்வகிப்பதற்கு கொழும்பின் கலாசார அமைச்சு, இந்தியத் தூதரகம் ஆகியவற்றோடு மாநகர சபையையும் உள்ளடக்கிய ஒரு கூட்டு நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான இணக்கம் எட்டப்பட்டது.

அதன்படி இந்தியா இந்தக் கட்டடத்தை இலங்கையிடம் ஒப்படைத்ததும் கொழும்பு அதனை யாழ். மாநகர சபையிடம் கையளிக்கும் என்பதே ஏற்பாடு. ஆனால், இப்போது– அப்படி நடக்காது என்று தெரிகின்றது. அதுமட்டுமல்ல தனக்குரிய, தனக்குச் சேரவேண்டிய ஒரு சொத்தில் யாழ்ப்பாண மாநகர சபை முதல்வரின் பெயரைப் பொறிப்பதற்கே கொழும்பு அமைச்சரிடம் கெஞ்சிக் கூத்தாட வேண்டியிருக்கிறது; பிச்சையெடுக்கவேண்டியிருக்கிறது.

அழைப்பிதழில் மாநகர சபைக்கு இடமில்லை, நிகழ்வில் மாநகர சபை முதல்வருக்கு எந்த வகிபாகமும் இல்லை. உண்மையில் அவரது தலைமையில்தான் இந்த நிகழ்வே நடந்திருக்கவேண்டும். அதில் மற்றெல்லோரும் அழைப்பு விருந்தினர்களாகவே இருந்திருக்கவேண்டும். ஆனால், கட்டத்தின் நினைவுக் கல்லில் மாநகர முதல்வரின் பெயரைப் பதிப்பதற்கே கொழும்பிடம் இன்று மாலை வரை இழுபறிப்படவேண்டியிருந்தது.

திருமணம் என்றால் மாப்பிள்ளை நான் சாவு வீடென்றால் பூதவுடல் நான் என்ற வகையில் செயற்படும் கொழும்பு அது சிங்கள அமைச்சராக இருந்தாலும் சரி தமிழ் அமைச்சராக இருந்தாலும் சரி, அதிகாரப் பகிர்வு அல்ல பரவலாக்கம் என்று சொல்வதும்கூட போலியானதுதான்.



## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை எதிர்த்து இராகலையில் ஆர்ப்பாட்டம்

அத்தியாவசியப் பொருட்களின் விலையை குறைக்குமாறுகோரியும், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு வலியுறுத்தியும் இராகலை நகரில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தொழிற்சங்க மற்றும் வெகுஜன அமைப்புகளின் கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்போராட்டத்தில் பலர் கலந்துகொண்டனர்.

கறுப்பு கொடிகளையும் பதாதைகளையும் தாங்கியவாறு அவர்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டிருந்தனர், அரசின் நியாயமற்ற வரிவிதிப்பு கொள்கைக்கும் அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அரசு அநாவசியமான செலவுகளை குறைக்க வேண்டும், அடக்கு முறைகளைநிறுத்தவேண்டும் எனப் போராட்டக்காரர்களில் ஒருவர் தெரிவித்தார்.

## ஊசி மூலமாக ஹெரோயின்; ஒரேயிடத்தில் 10 பேர் கைது

யாழ்ப்பாண நகரை அண்மித்துள்ள பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில்கூடி ஊசி மூலம் ஹெரோயின் போதைப் பொருளைப்பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறியுள்ளனர்.

இந்த கைது நடவடிக்கை கடந்த புதன் கிழமை இரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரே இவர்களைக் கைதுசெய்தனர்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை யாழ். நீதிவான் நீதிமன்றின் கட்டளை பெற்று மறுவாழ்வு முகாமுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கடன் மறுசீரமைப்பு உத்தரவாதம் கிடைத்தால் மட்டுமே இனிக் கடன்

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

இலங்கைக்குக் கடன் வழங்குவதற்கு ஏற்கனவே கடன் வழங்கியவர்கள் அதனை மறுசீரமைப்பது தொடர்பில் உத்தரவாதம் வழங்குவது அவசியம் என சர்வதேச நாணயநிதியம் மீண்டும்வலியுறுத்தியுள்ளது.

கடன் நெருக்கடியில் சிக்குண்டுள்ள இலங்கைக்கான தனது கடன் திட்டம் இலங்கைக்கு கடன்வழங்கிய நாடுகளின் உத்தரவாதத்திலேயே தங்கியுள்ளது என சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளர் அறிக்கையொன்றில்தெரிவித்துள்ளார்.

நிதி உத்தரவாதங்களை பெறுவதற்காக இலங்கை தொடர்ந்தும் இரு தரப்பு கடன்கொடுப்பனவா ளர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றது. உள்ளூர் சீர்திருத்தங்களை முன்னெடுத்துள்ளது. போதிய உத்தரவாதங்கள் கிடைத்ததும் ஏனைய தேவை கள் பூர்த்தியானதும்சர்வதேசநாணயநிதியத்தின் நிறை வேற்று சபை கடன் உதவி தொடர்பான ஏற்பாடுகளை இலங்கைக்கு சமர்ப்பிக்கும் எனவும் பேச்சாளர் தெரிவித்தார்.

## தமிழ் மக்களின் காணிகளை விடுவிக்க நாடாளுமன்றத்தில் எதற்கு விவாதம்?

### ஜேவிபி தலைவர் அனுரகுமார கேள்வி



வடக்கில் உள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு எந்த விவாதங்களும் அவசியமில்லை என மக்கள் விடுதலை முன்னணியின்தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சபையில் குறிப்பிட்டார். இந்த நாடாளுமன்றத்தின் 4ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கொள்ளை விளக்க உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

தமிழ் மக்களின் காணிகளை அரச நிறுவனங்களோ அல்லது இராணுவத்தினரோ கையகப்படுத்தியிருந்தால் அதனை உடனடியாக விடுவிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. இதனை எதற்காக விவாதப் பொருளாக மாற்றி ரணில் விக்கிரமசிங்க தனது கொள்கை விளக்க உரையில் குறிப்பிடுகிறார்?

ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் மகிந்தவும் இணைந்து தேசிய பிரச்சனையை தீர்ப்பதற்கு ஒரு ஆவணத்தை தயார் செய்யுங்கள். அதன் பின்னர் அதனை விவாதத்திற்கு உட்படுத்துங்கள். அப்போது ஒரு தீர்க்கமான முடிவினை எட்ட முடியும் என்றும் மாறாக சர்வகட்சி அரசைக் கூட்டிக் கலந்துரையாடுவதால் எந்த பயனும் இல்லை என்று அவர் தெரிவித்தார். சபாநாயகர் ஆசனத்தில் இருந்து ரணில் ஒரு விடயத்தை தெரிவிக் கின்றார் ஆனால் பிரதமர் வேறு ஒன்றை சொல்லி மக்களை குழப்புகின்றனர். இந்த நிலையில் சர்வகட்சிக் கூட்டடத்தில் கலந்துகொள்வதில் பயனில்லை -என்றார்.

# உயிரிழப்பு 21 ஆயிரத்தை கடந்தது

## உயிர் தப்பியோரும் உறைய வைக்கும் குளிரில் அவதி



துருக்கியில் பெரும் நிலநடுக்கம் நிகழ்ந்து 4 நாள்களின் பின்னரும் இடிபாடுகளுக்குள் சிக்கிகொண்டிருந்தவர்கள் உயிருடன் மீட்கப்படுகின்றனர். துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆயிரத்தைக் கடந்துவிட்டது. 4 நாட்களாகத் தொடரும் பணிகளால் சோர்வடைந்த மீட்புப் பணியாளர்களுக்கு வெள்ளிக்கிழமை பலரும் உயிருடன் மீட்கப்பட்டமை புதிய உற்சாகத்தைத் தந்துள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு மேலாக, கடும் குளிர், பட்டினி, மற்றும் விரக்திக்கு மத்தியில் பல லட்சக்கணக்கான மக்கள் குளிர்காலத்தின் நடுப்பகுதியில் வீடுகளின்றி நிர்க்கதியாகி நிற்பது மற்றொரு மனிதப் பேரிடரை அங்கு ஏற்படுத்தியிருக்கிறது.

துருக்கியின் தென்பகுதி ஹட்டேயிலுள்ள சமண்டாக் என்ற இடத்தில் இடிபாடுகளுக்குள் இருந்து பலர் உயிருடன் இரவுநேரம் மீட்கப்பட்டனர். அவர்களில் 10 வயதுச் சிறுவனும் அவனது தாயாரும் அடக்கம். நிலநடுக்கம் நிகழ்ந்து 90 மணித்தியாலங்களின் பின்னர் அவர்கள் மீட்கப்பட்டனர்.

அதே சமண்டாக் மாவட்டத்தில் 95ஆவது மணித்தியாலத்தில் அஸ்யா டொன்மஸ் என்ற 7 வயதுச் சிறுமி இடிபாடுகளுக்குள்ளிருந்து இழுத்தெடுக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டாள். 100ஆவது மணித்தியாலத்தில் டியார்பகிர் என்ற இடத்தில் 32 வயதான வார்லியும் அவரது மகனான செர்காட்டும் மீட்கப்பட்டனர்.

இருப்பினும் இடிபாடுகளுக்குள் உயிருடன் சிக்கிக் கொண்டுள்ளவர்களை இனி மீட்கமுடியும் என்கிற நம்பிக்கை மெதுமெதுவாகக் குறைந்து வருகின்றது.

1999ஆம் ஆண்டு துருக்கியைத் தாக்கிய பெரும் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட 17 ஆயிரம் என்ற உயிரிழப்பு எண்ணிக்கையை இந்த நிலநடுக்கம் கடந்துள்ளது. தற்போதுவரை 21ஆயிரம்பேர் அங்கு உயிரிழந்துள்ளனர். துருக்கியில் மட்டும் 18 ஆயிரத்து 342 பேர் இறந்துள்ளனர். சிரியாவில் இந்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 300 ஆகப் பதிவாகியுள்ளது. துருக்கியில் 74 ஆயிரத்து 242 பேர் காயமடைந்துள்ளனர்.

பாதிப்பு ஏற்பட்டு 4 நாள்களின் பின்னர் முதல் தடவையாக ஐ.நா. உதவிப் பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனத் தொடரணி துருக்கியூடாகச் சிரியாவிற்குள் நுழைந்துள்ளது.

மீட்புப் பணியிடங்களில் உறையவைக்கும் குளிர் நிலவுவதால் அடிக்கடி பணிகளை ஓய்வுக்குக் கொண்டுவரவேண்டியிருக்கின்றது. மீட்புப் பணி வாகனங்கள், ஜெனரேட்டர்கள் அனைத்தும் அணைக்கப்பட்டு கடும் அமைதிக்கு மத்தியில் யாராவது அபயக் குரல் எழுப்புகிறார்களா என்று உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது.

அத்தகைய குரல்கள் கேட்டாலும்கூட அவர்களை மீட்பதற்கான வசதிகளோ, உரிய உபகரணங்களோ, நிபுணத்துவமோ உதவியோ கிடைப்பதில்லை என்று உயிர் தப்பியிருக்கும் மக்கள் குற்றஞ் சாட்டுகின்றார்கள்.

கிறீஸ் நாடு லட்சக்கணக்கில் தற்காலிக கூடாரங்களையும் தடித்த போர்வைகளையும் அனுப்பி வைத்திருந்தாலும் உறைய வைக்கும் பனிக் குளிருக்கு மத்தியில் திறந்த வெளிகளில் இருக்கும் மக்களுக்கு அவை போதுமானதாக இல்லை. இரவில் வீதியோரம் தீ மூட்டி அதில் குளிர்காய்ந்தபடி உதவிகளுக்காகக் காத்திருக்கிறார்கள் மக்கள்.

## நிலநடுக்கத்தால் துருக்கி 3 அடி தூரம் நகர்ந்தது

துருக்கியில் கடந்த 6ஆம் திகதி அடுத்தடுத்து ஏற்பட்ட இரு நிலநடுக்கங்களால் பூமிக்கு அடியில் துருக்கி நிலத்தட்டுக்கள் 3 அடி தூரம் நகர்ந்துள்ளதாக புவியியல் ஆராய்ச்சி வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பூமிக்கு அடியில் உள்ள அனடாலியன் பிளேட், அரேபியன் பிளேட் மற்றும் யூராசியன் பிளேட் என்ற அடுக்குகளின் எல்லையில் துருக்கி உள்ளது. இதனால் நிலநடுக்கத்துக்கான வாய்ப்புகள் அங்கு அதிகம். துருக்கியில் தற்போது ஏற்பட்ட நிலநடுக்கத்தால், அனடாலியன் பிளேட் மற்றும் அரேபியன் பிளேட் பகுதியில் 225 கி.மீ தூரத்துக்கு நொருங்கியுள்ளன. இது துருக்கியை பூமியில் 10 அடி தூரத்துக்கு நகர்த்தியுள்ளது.

இத்தாலிய நிலநடுக்க நிபுணர் பேராசிரியர் கார்லோ டோக்லியோனி "சிரியாவுடன் ஒப்பிடும்போது துருக்கி மேற்கு நோக்கி ஐந்து முதல் ஆறு மீட்டர் வரை நகர்ந்திருக்கலாம் லெபனான் தலைநகர் பெய்ரூட், சிரியா தலைநகர் டமஸ்கஸ் மற்றும் எகிப்து நாட்டின் கெய்ரோ நகர் வரை நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. நிலத்தடி தட்டுக்களிடையே ஏற்பட்ட மோதல் 190 கிலோமீட்டர் நீளமும் 25 அகலமும் கொண்ட இந்த சிதைவவை ஏற்படுத்தி நிலத்தை கடுமையாக உலுக்கி, 9 மணி நேர இடைவெளியில் இரண்டு மிகத் தீவிரமான நடுக்கங்களை ஏற்படுத்தியது. உண்மையில், பூமி தொடர்ந்து நடுங்கியது" என்று தெரிவித்தார்.

## ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர உக்ரைன் அதிபர் கோரிக்கை

தங்கள் நாட்டை ஐரோப்பிய யூனியன் அமைப்பில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று அந்த அமைப்புக்கான நாடாளுமன்றத்தில் உக்ரைன் அதிபா வொலோதிமீா ஸெலென்ஸ்கி உருக்கமாக வேண்டிக்கொண்டார். ரஷ்யாவுடன் நடை பெற்று வரும் போரில் கூடு தல் படைத்துறை உதவிகளைக் கோருவதற்காக பிரிட்டனுக்கு புதன்கிழமை வந்து பேச்சு நடத்திய ஸெலென்ஸ்கி, அதனைத் தொடாந்து பிரான்ஸிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்.

அதன் பின்னா, ஐரோப்பிய யூனியன் தலைமையகம் அமைந்துள்ள பெல்ஜியம் தலைநகா பிரஸ்ஸெல்ஸில், அந்த அமைப்புக்கான நாடாளுமன்றத்தில் அவா உரையாற்றினார். அப்போதே தனது நாட்டையும் ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அப்போது அவர் தெரிவித்ததாவது:

தற்போது நடைபெற்று வரும் போா ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலானது இல்லை; அது ரஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையிலானது. இந்தப் போரில் வெற்றியை நோக்கி உக்ரைன் பயணித்துக் கொண்டிருக் கிறது. இந்தச் சூழலில், ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடு என்ற வகிபாகம் உக்ரைனுக்கு அளிக்கப்பட வேண்டும்.

உக்ரைன் இல்லாமல் ஐரோப்பிய ஒன்றியம் முழுமையடையாது என்றாா.

தற்போதைய சூழலில் ஐரோப்பிய யூனியன் உறுப்பினராக உக்ரைன் ஆவது மிகவும் கடினமான, நீண்ட காலம் பிடிக்கும் நடைமுறைகளைக் கடந்த பிறகே சாத்தியமாகும்.

இருந்தாலும், ஐரோப்பிய நாடுகளுக்கு நேரில் சென்று இந்தக் கோரிக்கையை ஸெலென்ஸ்கி முன்வைப்பது, போா முனையில் சண்டையிட்டு வரும் உக்ரைன் வீராகளுக்கு உற்சாகத்தை அளிக்கும் என்று கூறப்படுகிறது.

## சீன சிசிரீவிகளுக்கு ஆஸி. திடீர் தடை

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, தங்களது நிலைகளில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களை அகற்ற ஆஸ்திரேலிய பாதுகாப்புத் துறை முடிவு செய்துள்ளது. அமெரிக்காவிலும், பிற நாடுகளிலும் பலூன்கள் மூலம் சீனா உளவு பார்ப்பதாக தகவல் வெளியானதைத் தொடாந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## இம்ரான் எமது குறியில்லை என்கிறது தலிபான்

பாகிஸ்தான் தலிபான்கள் தன்னைக் கொல்ல திட்டமிட்டிருப்பதாக முன்னாள் பிரதமா இம்ரான் கான் கூறியதை அந்த பயங்கரவாத அமைப்பினா மறுத்துள்ளனா. தாங்கள் பாதுகாப்புப் படையினரை மட்டுமே குறிவைப்பதாகவும், அரசியல் தலைவாகள் தங்களது இலக்கு இல்லை எனவும் தலிபான்கள் கூறினா்.

## வலதுசாரி கட்சிக்கு தடை

கிரீஸில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் போட்டியிட, முன்னாள் எம்.பி. இலியாஸ் கசிடியாரிஸின் தலைமையிலான தீவிர வலதுசாரிக் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. நாஜி ஆதரவு அமைப்புடன் இருந்த தொடாபு காரணமாக, அவருக்கு 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.





### போருக்கு மத்தியிலும் மனிதாபிமானம்

## துருக்கி, சிரியாவிற்கு உக்ரைன் படையினர்

21 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிர்களைக் காவுகொண்ட துருக்கி, சிரிய நிலநடுக்கத்தால் பாதுக்கப்பட்டவர்களுக்கு உதவவும் மீட்புப் பணிகளில் ஈடுபடவும் போருக்கு மத்தியிலும் தனது படையினரை இரு நாடுகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது உக்ரைன்.

ரஷியாவுடனான போர் சூழல் இன்னும் முடிவுக்கு வராத நிலையிலும் மனிதாபிமானப் பணிகளில் உதவுவதற்காக தமது படையினர் அனுப்பப்பட்டுள்ளனர் என்று அந்த நாடு தெரிவித்தது. வைத்துள்ளது.

ரஷ்யாவுடன் போர் நடைபெற்று வருவதால், எமது படையினர் விழிப்புணர்வோடும் துடிப்போடும் இருக்கின்றனர். அவர்களின் உதவி தற்போது துருக்கி, சிரியாவுக்குத் தேவை என்பதால் அவர்களை அனுப்பி வைத்துள்ளோம் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. அரச படைகளின் மீட்பு பிரிவுகளைச் சேர்ந்த 88 வீரர்கள் வியாழக்கிழமை இரவு அனுப்பி வைக்கப்பட்டனர்.

"எங்கள் நாட்டில் போர் நடைபெற்று வருகிறது. ஆனால், தற்போது எங்கள் உதவி துருக்கி, சிரியாவுக்குத் தேவைப்படுகிறது. இது இருவருக்கும் பரஸ்பரமானது" என்று தெரிவித்தார் உக்ரைன் அரச செய்தித்தொடர்பாளர் ஒலேக்சான்ட் கோருன்ஷி,

# ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு என்றால் இந்த நாடு ஒரு காலத்திலும் உருப்படாது!

## சாபமிடுகின்றார் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்



இலங்கை – இந்திய ஒப்பந்தத்தால் பிரசவிக்கப்பட்ட 13 ஆவது திருத்தம் உயிருடன் உள்ளதா? அல்லது கொல்லப்பட்டு அஸ்தி கரைக்கப்பட்டு விட்டதா? என்று எண்ணத் தோன்றுகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் தீர்வு வழங்குவதாக ஒருபுறம் குறிப்பிட்டு விட்டு மறுபுறம் சிங்கள பேரின வாதத்தைக் கட்டவிழ்த்து விட்டுள்ளார்.

பிள்ளையை கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டி விடுகிறார். ஒற்றையாட்சிக்குள் அரசியல் தீர்வு என்றால் இந்த நாடு ஒருபோதும் உருப்படாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பூமியதிர்ச்சி இயற்கையின் கோர தாண்டவத்தால் அந்த நாட்டு மக்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

உயிர் வாழ்வதற்காக அந்நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமை கவலைக்குரியது, ஆகவே துருக்கி மற்றும் சிரியாவின் சம்பத்திற்கு உயரிய சபை ஊடாக ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தற்போதைய காலக்கட்டம் இலங்கையின் அரசியல் நிலைவரத்தை தீர்மானிக்கும் நிலையில் காணப்படுகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க அரசியல் தீர்வு தொடர்பில் ஒருசில வார்த்தை பிரயோகத்தை வெளியிட்டார். இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 35 ஆண்டுகாலம் நிறைவடையும் நிலையில் உள்ளது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தால் பிரசவிக்கப்பட்ட அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு 35 வயதாகும் நிலையில் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக மீண்டும் போர் கோங்கள் எழுப்பப்பட்டுள்ளன. 13 ஆவது திருத்தம் என்ற குழந்தை உள்ளதா அல்லது கொல்லப்பட்டு, அஸ்தி கரைக்கப்பட்டு விட்டதா என்று கேள்வி கேட்கும் நிலை காணப்படுகிறது.

சிங்கள தலைவர்கள் தொடர்ந்து ஒற்றையாட்சி என்ற கோஷத்தை எழுப்பிக் கொண்டு நாட்டை மீண்டும் அதள பாதாளத்துக்குக் கொண்டு செல்கிறார்கள்.

முன்னாள் பிரதமர் எஸ்.டி. பண்டாரநாயக்க சமஷ்டி தொடர்பான யோசனையை முன்வைத்தார். கரையோரச் சிங்களம், மலைநாட்டுச் சிங்களம், யாழ். தமிழ் என்ற சமஷ்டி அடிப்படையிலான யோசனைகளை 1926 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டார். இறுதியில் பௌத்த பிக்குவினால் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று குறிப்பிட்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன குறிப்பிட்டு அமைதி வழி போராட்டத்தை ஆயுத போராக மாற்றியமைத்தார். போர் பிரகடனமே இன்று நாட்டை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

நாட்டில் அரசியல் முரண்பாடு புரையோடிப் போயுள்ள பின்னணியில் 2048 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பொருளாதாரத்தை மேம்படுத்துவதாக ஜனாதிபதி குறிப்பிடுகின்றமை வேடிக்கையாகவுள்ளது.

ஒற்றையாட்சி முறைமைக்குள் தான் அரசியல் தீர்வு என அரச தலைவர் குறிப்பிடுகின்றமை இந்த நாட்டை ஒருபோதும் உருப்படச் செய்யாது. நாட்டு மக்கள் அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழ வேண்டுமாயின் பிளவுபடாத நாட்டுக்குள் சமஷ்டி ஆட்சி முறையில் தீர்வு வழங்க வேண்டும்.

யுத்த காலத்திலும், இறுதி யுத்த காலத்தில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பல லட்சக் கணக்கான எமது உறவுகள் காணாமலாக்கப்பட்டுள்ளார்கள். பல ஆதாரங்கள் உள்ளன.

இந்த மண்ணில் இன அழிப்பு இடம்பெற்றுள்ளது, இழக்க முடியாத அனைத்தையும் எமது இனம் இழந்துள்ளது. இழப்பிற்கு பின்னரும் ஒன்றிணைந்து வாழ்வதற்குத் தலைப்படுகிறோம். ஒன்றிணைந்து வாழும் அரசியல் உரிமை சமஷ்டி முறைமையுடன் கோருகிறோம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஊடாக வழங்கப்பட்ட பல உரிமைகள் 28 நீதிமன்ற தீர்ப்புக்கள் மற்றும் அரச சுற்றறிக்கை ஊடாகப் பறிக்கப்பட்டுள்ளன.

நாட்டில் அரசமைப்பு முறையாக செயற்படுத்தப்படுகிறதா? 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக பிக்குகள் போர்க் கொடி தூக்கியுள்ளார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிள்ளையை கிள்ளி விட்டு தொட்டிலை ஆட்டி விடும் வகையில் அரசியல் தீர்வு வழங்குவதாகக் குறிப்பிட்டுக் கொண்டு சிங்கள பேரினவாதத்தை தூண்டி விடுகிறார்.

சமஷ்டி முறைமையில் தீர்வு வழங்கத் தயாராக இருந்தேன், ஆனால் அதற்கு சிங்களவர்கள் இடமளிக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறுதியில் குறிப்பிடுவார்.

தமிழ் இனத்தை அழித்து யுத்தத்தை வெற்றிகொண்டோம் என்ற மமதையின் வெற்றி போதையில் இருந்த ராஜபக்ஷ குடும்பத்தை சிங்கள மக்கள் விரட்டியடித்தார்கள்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை நாட்டின் அடிப்படை பிரச்சினைகளுக்கும், இனப்பிரச்சினைக்கும் எவ்விதத்திலும் தீர்வு பெற்றுக்கொடுக்காது. ஜனாதிபதியின் கொள்கை நாட்டை வங்குரோத்து நிலைக்கு தொடர்ந்து கொண்டு சென்று மீண்டும் யுத்தத்தை தோற்றுவிக்கும். 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக ஒரு தரப்பினர் போர்க்கொடி அரச அனுசரணையுடன் தூக்குவிறார்கள். மீளப் பறிக்க முடியாத வகையில் அதிகாரம் சமஷ்டி ஆட்சி ஊடாக வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். – என்றார்.

# இலங்கை மிற்சுபிஸிக்கு மார்ச் மாதம் மூடு விழா

## 60 வருடங்களின் பின்னர் மூடை கட்டுகிறது

ஜப்பானிய வர்த்தக துறையில் மாபெரும் நிறுவனமான மிற்சுபிஸி இலங்கையில் தனது செயற்பாடுகளை அடுத்த மாதம் முடிவுக்கு கொண்டுவர தீர்மானித்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டுக் கடனைத் தற்காலிகமாக நிறுத்தியமை, இலகு ரயில் திட்டம், இயற்கை திரவ வாயு திட்டம் உட்பட ஜப்பானின் புதிய திட்ட யோசனைகளை திடீரென நிறுத்தியது, பாதகமான சர்வதேச மதிப்பீடுகள் மற்றும் பொருளாதாரக் கண்ணோட்டம் ஆகிய காரணங்களை அடிப்படையாக கொண்டு 60 வருடங்களின் பின்னர் திற்சுபிஸி தனது நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு திட்டமிட்டுள்ளது என இலங்கைத் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கும் ஜப்பானுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளில் பிரதான பங்காளியான மிற்சுபிஸி, ஏறக்குறைய 60 வருடங்களாக இலங்கையின் சில உட்கட்டமைப்பு திட்டங்களில் பிரதான பங்குதாரராக இருந்து வருகின்றது.

மிற்சுபிஸியின் கொழும்பு அலுவலகத்தை மார்ச் 31 ஆம் திகதி மூடுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் தனியார் துறையினருக்கு அதிர்ச்சியளிக்கும் செய்தியாக அமைந்ததுடன் மிற்சுபிஸியின் இந்த முடிவால் இலங்கை பெரும் பின்னடைவை சந்திக்கும் என உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

ஜப்பான் இலங்கையின் மிகப்பெரிய கடன் வழங்குநராக உள்ளதுடன், கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாத நிலைவரப்படி, இலங்கை ஜப்பானுக்கு 2.46 பில்லியன் அமெரிக்க டொலர்களை செலுத்த வேண்டியுள்ளது.

மிற்சுபிஸி வெளிநாட்டில் திறக்கப்பட்ட முதல் அலுவலகங்களில் இலங்கை அலுவலகமும் ஒன்றாகும்.


இலங்கையின் பல நிறுவனங்களின் வர்த்தகத்துக்கு மிற்சுபிஸி பங்களித்துள்ளதாகவும் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகாமையால் நிதியளிக்கப்பட்ட பல திட்டங்களில் மிற்சுபிஸி ஒரு முக்கிய செயல்பாட்டு பங்காளியாக இருந்தது.

மிற்சுபிஸியின் கொழும்பு அலுவலகத்தில் இருபது ஊழியர்களே உள்ள போதிலும், நிறுவனத்தின் வர்த்தக மற்றும் திட்டத் துறைகள் ஆயிரக்கணக்கான இலங்கையர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்க இடமளிக்கவே மாட்டோம்

## அதுரலியே ரத்ன தேரரும் போர்க்கொடி



ஜனாதிபதி வேட்பாளராகி வெற்றிபெறுவதை இலக்காகக் கொண்டே வடக்கு, கிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் கருத்துக்களை கூறுகின்றார்.

ஆனால் எந்த வகையிலும் அவ்வாறான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதற்கு தாம் இடமளிக்க மாட்டோம் என சுயாதீன உறுப்பினரான அதுரலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் அரச கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகம் தொடர்பில் பல்வேறு விடயங்களைக் கதைக்கின்றார். நீங்கள் கண்ணாடிக்கு முன்னால் நின்று பாருங்கள் என்று கேட்கின்றேன்.

ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு ரணில் விக்கிரமசிங்க தந்திரங்களைச் செய்கின்றார். பொதுஜன பெரமுனவில் சிலரை இணைத்துக் கொண்டும்.

சஜித் தரப்பில் இருந்தும் சிலரை இணைத்துக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்ல திட்டமிடுகின்றார். அதற்காக தனது கட்சியை பலப்படுத்தி தேர்தலில் வெற்றிபெற முடியுமென்று எதிர்பார்க்கின்றார்.

இதற்காகவே வடக்கு, கிழக்கில் காணி அதிகாரங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கதைக்கின்றார். மாகாணசபைகள் கலைக் கப்பட்டுள்ள நேரத்தில் அவர் எப்படி இதனைக் கதைக்க முடியும். அப்படியென்றால் அந்த அதிகாரங்களை ஆளுநர்களிடம் தான் வழங்க வேண்டும்.

இப்போது நீங்கள் தேவையில்லாத பிரச்சினையையே ஏற்படுத்துகின்றீர்கள். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை. – என்றார்.

# போலி நாணயத்தாள்களுடன் இளைஞர்கள் இருவர் கைது!

அக்கரைப்பற்று பகுதியில் பழக்கடையொன்றில் ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளை வழங்கி பழம் வாங்க முயற்சித்த அட்டாளைச்சேனை பிரதேசத்தை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று – கல்முனை வீதியிலுள்ள பள்ளி வாசலுக்கு அருகிலுள்ள பழக்கடைக்கு சென்று 5 ஆயிரம் ரூபா தாளொன்றை வழங்கி 24 வயதுடைய மாணவன் பழமொன்றை வாங்கியுள்ளார். இதனையடுத்து கடை உரிமையாளர் போலி நாணயத்தாள் என்பதையறிந்து உடனடியாக பல்கலைக்கழக மாணவனை மடக்கிபிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததுடன், அவருடன் வந்த நண்பன் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதன்போது கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவனிடமிருந்து மேலும் இரு 5000 ரூபா போலி தாள்கள் உட்பட மூன்று 5000 ரூபா போலி நாணயத்தாள்களை மீட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேகநபர்களை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இராணுவத் துணையுடன்தான் ரணிலின் ஆட்சி தொடர்கிறது

## யாழ். பல்கலை விரிவுரையாளர் தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இராணுவத்தின் உயர் பயனை பயன்படுத்தித்தான் தனது ஆட்சியை முன்னெடுத்து செல்கிறார் என யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். ரணில் விக்ரமசிங்க ஜன நாயக முறையில் தேர்தல் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி அல்லர். அவர் இராணுவத்தின் உயர் பலனை பயன்படுத்தி தான் தனது ஆட்சியை முன்னெடுத்து செல்வதை பார்க்க கூடியதாக உள்ளது.

நாட்டில் இடம்பெறும் மக்கள் போராட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இராணுவத்தை பயன்படுத்தியே அடக்கு கின்றார்.

இவ்வாறு தான் காலம் காலமாக எமது ஆட்சியாளர்கள் அவர்களின் சுயநலனுக்காக இவ்வாறானதொரு பாரிய இராணுவக் கட்டமைப்பை உருவாக்கி வைத்துள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் முடிந்து 13 வருடங்களாகி விட்டன. பொதுவாக யுத்தம் முடிந்த பின்னர் நாடு படிப்படியாக இராணுவத்தை குறைக்க வேண்டும்.

ஆனால் யுத்தத்துக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ராஜபக்ச அரசாங்கம் தங்களின் சுயநலனுக்காக இராணுவத்தை இன்னும் பெரிதாக்கி, பாரிய நிதிகளை அதற்கு ஒதுக்கிய கொள்கைகள் தான் காணப்பட்டன.

# 13ஐ அல்ல பௌத்தத்தையே பிக்குகள் போட்டு எரித்தனர்

## அருட்தந்தை சக்திவேல் காட்டம்



பிக்குகள் அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தத்தை எரிக்கவில்லை. அவர்கள் எரித்தது பௌத்தத்தையே என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

பிக்குகள் கடந்த புதன்கிழமை பேரணி நடத்தி அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தத்தை வீதியில் எரித்திருக்கின்றார்கள். அவர்கள் எரித்தது பௌத்தத்தையே.

பிக்குகளின் அரசியலுக்கு பின்னால் உள்ள அரசியல் சக்தியே அதற்கு காரணமாகும். ராஜீவ் காந்தி–ஜே.ஆர் ஒப்பந்தத்தை 36 வருடங்களுக்கு முன்னரே தமிழர்கள் தமது அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை.

13 ஆம் திருத்தத்துடன் உருவான மாகாண சபையையும் ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னரும் அதனை தீர்வாக முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கும் எவரும் ஆயத்தம் இல்லை.

கொழும்பு அரசியல்வாதியான மனோ கணேசன் மட்டுமே இது அரசியல் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளி என கூறிக்கொண்டிருக்கின்றார்.

இத்தகைய சூழ்நிலையில் ரணில் 13 என்று கூறுவதும், பிக்குகள் அதனை பேரணியாக வந்து எரிப்பதும் அரசியல் நாடகமே அன்றி வேறில்லை.

இந்த 13 ஐ எரித்தல் அரசியலுக்குப் பின்னால், சீன சார்பு குழுவினரின் ஆதரவோடும், இந்திய மற்றும் மேற்குலக சார்பு ஆதரவோடுமே ரணில் விக்ரமசிங்க பதவியில் இருக்கும் நிலையில், பூனைக்கு வாலும் எலிக்கு தலையையும் காட்டுகின்ற பாம்பின் செயற்பாடு இருக்கின்றது.

இந்தியாவையும், தமிழர்களையும் சமாளிப்பதற்கு 13 என்றும், சீனாவை தம்வசம் வைத்திருக்க பிக்குகள் பேரணி ஒருங்கே கையாளப்படுகிறது. தமிழர்கள் ஏமாந்து விடக் கூடாது. ஆனால் சில தமிழ் அரசியல்வாதிகள் இதற்கு பின்னால் நிற்பது அரசியல் சுய இலாபம் கருதியே.

இத்தகைய சூழலில் ரணில் ஜனாதிபதி தேர்தலை நோக்கி காய் நகர்த்துவதையும் உணரக்கூடியதாக உள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி 'நான் நாட்டை பிரிக்க மாட்டேன். சமஷ்டி இல்லை. ஒற்றையாட்சியின் கீழ் தீர்வு' எனக் கூறுவதை நாம் அவதானிக்கலாம்.

சிங்கள பௌத்த வாக்குகளின் சொந்தக்காரர்கள் பக்கமாக நின்று அரசியல் செய்யும் தலைமையின் கீழ் தமிழர்களுக்கு எதிர்காலம் இல்லை. இந்தப் பின்னணியில் சிங்கள பௌத்த வாக்குகளின் உரிமையாளர்கள் பேரணியை கொழும்பு நோக்கி நகர்த்தி உள்ளனர். தமிழர்கள் பௌத்தத்தை மதிக்கின்றார்கள்.

'அனைத்து உயிர்களும் துக்கமற்று இருப்பதாக, அனைத்து உயிர்களும் நலமாய் இருப்பதாக, அனைத்து உயிர்களும் நோயற்று இருப்பதாக' என்பதே பௌத்த கோட்பாடு. ஆனால் ஒரு சில பிக்குகளின் அரசியல் அதுவல்ல. பிக்குகளின் அரசியல் என்பது கொலையும் செய்யும் என்பதற்கு எஸ்.டபிள்யு. பண்டார நாயக்கவின் கொலை நல்ல உதாரணம். இதேபோல் அது தீயோடும் விளையாடும் என்பதற்கு இறுதி உதாரணமே 13 தீயிட்டு கொளுத்தியமை. 75 ஆண்டு காலமாக தீர்வு சிங்கள பௌத்த அரசியலாலும் பிக்குகளின் அரசியலாலும் சுதந்திரம் சாம்பராகி உள்ளது. – எனக் கூறியுள்ளார்.

## பிரித்தானிய நீதிமன்றில் கூச்சலிட்ட இலங்கையர்!

கடந்த ஆண்டு குதிரை காவலர் அணிவகுப்பின் போது ஆயுதமேந்திய அதிகாரிகளை நோக்கி சென்றதாக கூறப்பட்டு கைது செய்யப்பட்ட இலங்கையர் நீதிமன்றில் கூச்ச லிட்டதாக இங்கிலாந்தின் செய்தித்தளமொன்று செய்தி வெளியிட் டுள்ளது.

இந்த சம்பவம் கடந்த புதன்கிழமை பதிவாகியுள்ளது.

இந்நிலையில் 30 வயதான பிரசாந்த் கந்தையா என்ற இலங்கையரே நீதிமன்றில் கூச்சலிட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'பிரித்தானியாவை நான் வெறுக்கின்றேன், நான் இலங்கைக்கு திரும்பிச் செல்ல விரும்புகின்றேன்' என்று கூச்சலிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதியன்று செயின்ட் ஜேம்ஸ் பூங்கா வில் குதிரைப்படையினரின் அணி வகுப்பு நடைபெற்ற வேளையில் கத்தி ஒன்றுட

எனினும் தற்கொலை செய்து கொள்ளும் நோக்கத்தில் இருந்த அவர், தம்மை காவலர்கள் சுட்டுக் கொல்லவேண்டும் என்பதற்காகவே, அவர்களை நோக்கி ஓடினார் என நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அவரை அறங்கூறுனர்கள் விடுதலை செய்ய பரிந்துரைத்த நிலையில் திடீரென்று அவர் நீதிமன்றத்தில் கூச்சலிட்டுள்ளார்.

மேலும் நீதிமன்றில் கூச்சலிட்டமைக்காக சவுத்வார்க் கிரவுன் நீதிமன்றத்தால் அவருக்கு தண்டனை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின் கட்டண அதிகரிப்பைத் தவிர மாற்றுத் தீர்வு எதுவுமே கிடையாது

## கையை விரித்தார் அமைச்சர் காஞ்சன



எரிபொருள் மற்றும் மின்கட்டணத்தை அதிகரிப்பதை தவிர மாற்றுத் திட்டம் ஏதும் தற்போது கிடையாது.

24 மணித்தியாலங்களும் மின் சாரத்தை விநியோகிக்க வேண்டும் என்றால் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் .

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் மின் மற்றும் எரிபொருள் கட்டணத்தை அதிகரித்தால் அது ஆளும் தரப்பிற்கு பாதிப்பை ஏற் படுத்தும் என்பதை நன்கு அறிவோம்.

அரசியல் நோக்கத்துக்காக எம்மால் பொய்யாக செயற்பட முடியாது என மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டின் தற்போதைய நிலை அதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் போன்றவை தொடர்பில் ஜனாதிபதியின் அக்கிராசன உரை தெளிவுபடுத்தியுள்ளது.

நெருக்கடியில் இருந்து மீள்தற்கான ஒரே வழி காணப்படுகின்றது. அந்தவகையில் எத்தகைய அரசியல் நோக்கங்கள் இருந்தாலும் அந்த வழி தொடர்பில் சிறந்த தெளிவை நாட்டு மக்களும் நாடாளுமன்றத்தில் அனைவரும் தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகும்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரையை எதிர்க்கட்சியினர் பகிஷ்கரித்தனர். சிறந்த கல்விமான்களான பேராசிரியர்கள் கூட அதனை பகிஷ்கரித்தமை வியப்புக்குரியது.

உண்மையில் நாடு தேர்தல் ஒன்றுக்கு தயாராகி வரும் நிலையிலேயே ஜனாதிபதி இத்தகைய உரையொன்றை ஆற்றியுள்ளார்.

அது அரசாங்கத்தின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைப் பாதிக்கும். எனினும் மாற்று வழி இல்லாத நிலையிலேயே தேர்ந்தெடுத்துள்ள வழி தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்தார்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பது, வரி அதிகரிப்பு, மின்சார கட்டணம் அதிகரிப்பு, எரிபொருள் அதிகரிப்பு என்பது தொடர்பில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. ஒரு போதும் அரசாங்கம் அதனை விரும்பவில்லை எனினும் நாட்டில் தொடரும் பற்றாக்குறையை ஓரளவேனும் நிவர்த்தி செய்வதற்கு அதனைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது.

அதனையே தமது உரை மூலம் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அந்தவகையில் அனைவரும் யதார்த் தத்தைப் புரிந்து கொள்வது அவசியம்.

மின் கட்டண அதிகரிப்பு தவிர்க்க முடியாதது.

அதே போன்று கல்விப் பொது தராத உயர்தர பரீட்சை காலத்தில் மின் துண்டிப்பைத் தவிர்க்குமாறு தெரிவிக்கப்பட்டு வருகிறது. எனினும் சில மாதங்களுக்கு முன்பே நாம் அது தொடர்பில் விளக்கமளித்திருந்தோம். அவ்வாறு செய்வதானால் அந்த நட்டம் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதையும் நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். எனினும் அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

அதேபோன்று பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் பரிந்துரையில் மாடி வீட்டுக்குக் குடியிருப்புகளுக்கு விசேட மின் கட்டண சலுகைகள் வழங்கப் பட்டுள்ளன.

ஏன் அவ்வாறு வழங்கப்படுகிறது எனத் தெரியாது. அந்த மின் கட்டண சலுகை மீளப்பெறப்பட்டால் சாதாரண வீட்டு உபயோகத்துக்காக வழங்கப் படும் மின்சாரக் கட்டணம் தொடர்பில் கவனம் செலுத்த முடியும்.

மின்கட்டண அதிகரிப்பு தொடர்பான தமது நிலைப்பாட்டை எதிர்வரும் 15 ஆம் திகதி அறிவிப்பதாக இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. உயர்தர பரீட்சை இடம்பெறும் காலத்தில் மின்துண்டிப்பு அமுல் படுத்துவதையிட்டு வருத்தமடைகிறோம். –என்றார்.



# யாழ்.மாநகர முதல்வர் நகரில் இறங்கி ஆய்வு

யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையிலான மாநகரசபை துறைசார் அதிகாரிகள் குழு நேற்று (வியாழக்கிழமை) விசேட களவிஜயம் ஒன்றை யாழ்ப்பாணம் நகர்ப்புறத்திற்கு மேற்கொண்டனர்.

நகர்ப்புறத்தில் அமைந்துள்ள மாநகர சிற்றங்காடி, பஸ் நிலைய கடைத்தொகுதிகள், நவீன சந்தை கட்டடத்தொகுதியில் உள்ள கடைகள் உள்ளிட்ட பகுதிகளில் கடைகளின் செயற்பாடுகள், நடைபாதைக்குத் தடையாகவுள்ள விற்பனைகள் தொடர்பில் அவதானிக்கப்பட்டு உடனடியாக அவற்றை அப்புறப் படுத்தி நடைபாதைக்கு உள்ள தடைகளை நீக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

மேலும் அங்காடியில் உள்ள சுகாதார நிலைமைகள் தொடர்பில் ஆராயந்து அதற்கு தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அதேபோன்று வியாபார நிலையங்களை நடத்தி வருபவர்கள் நடைபாதை போக்குவரத்துக்கு இடையூறு இன்றி தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று உடனடி அறிவித்தல்களை உரிய கடை நடத்துநர்களுக்கு வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறிப்பாக நவீன சந்தை கட்டடத்தொகுதியில் உள்ள கடைகள் சுகாதார மற்றும் நடைபாதை போக்குவரத்து நடவடிக்கைகளுக்கு இடையூறாக மேற்கொள்ளும் விற்பனைகளைத் தவிர்ப்பதற்கான உத்தரவுகளை முதல்வர் பிறப்பித்துள்ளார்.

மேற்படி விடயங்களை அவதானித்து உரிய முறையில் அறிக்கையிடுமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

மேலும் நகர்ப்புறம், நவீன சந்தை கட்டடத் தொகுதியோடு அமையப்பெற்றுள்ள மலசலகூடங்களை முறையாகப் பராமரிக்காமை தொடர்பில் அவதானிக்கப்பட்டு உரிய முறையில் துப்புரவு செய்து பராமரிப்பதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முதல்வரின் இந்த களவிஜயத்தில் மாநகர பொறியியலாளர், சுகாதார மேற்பார்வையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிங்களவர்களை எதிர்ப்பவர்களும் தெற்கில் பயமின்றி வாழ்கின்றனராம்

## பௌத்த நாடென்பதால்தான் அப்படியாம்

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதாலேயே சிங்களவர்களுக்கு எதிராகப் பேசுபவர்கள் தெற்கில் பாதுகாப்பாக வாழ்கிறார்கள் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் அரச கொள்கை விளக்க உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தின் போது இது சிங்கள பௌத்த நாடு அல்ல என்று நாடாளுமன்ற உறுப்பின் செல்வராசா கஜேந்திரன் வெளியிட்ட கருத்தொன்று தொடர்பில் ஒழுங்கு பிரச்சினையை எழுப்பி கூறுகையிலேயே சரத் வீரசேகர இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது சரத் வீரசேகர மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

இலங்கை சிங்கள பௌத்த நாடு அல்ல என்று இவர் கூறுகின்றார். இவர்கள் குருந்தூர் மலையில் உள்ள விகாரைக்கு சென்று மலர் ஒன்றையேனும் வைத்து வழிபடுவதற்கு பிக்குகளுக்கு இடமளிக்கவில்லை. இருந்தும் இவர்கள் இங்கே இப்படி இருக்கின்றமை இது சிங்கள பௌத்த நாடு என்பதாலேயே ஆகும். யாழ்ப்பாணத்தில் சிங்களவர்களுக்கு எதிராகக் கூறிகொண்டு இங்கே வந்து பாதுகாப்பாக இருப்பதும் இது சிங்கள நாடு என்பதாலேயே ஆகும் என்பதை அவருக்கு சொல்லிக்கொடுங்கள். – என்றார்.

# 321 ஓட்டங்களுடன் பலமான நிலையில் இந்திய அணி




## சதம் விளாசினார் ரோகித் சர்மா

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தில் இந்தியா 321 ஓட்டங்களுடன் பலமான நிலையில் உள்ளது. அணித் தலைவர் ரோகித் சர்மா சதமடித்து அசத்தினார்.

நாக்பூரில் நேற்றுத் தொடங்கிய இந்த முதல் டெஸ்ட் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆடுகளத்தின் தன்மை முதலில் ஆடும் அணிக்குச் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும், ஜடேஜா மற்றும் அஸ்வினின் சுழல் பந்தில் சிக்கிச் சின்னாபின்னமாகியது ஆஸ்திரேலியா. 177 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஆஸி. அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் இருவரையும் இந்திய அணியின் வேகப் பந்துவீச்சாளர்கள் வீழ்த்தினாலும் எஞ்சிய 8 இலக்குகளையும் ஜடேஜா (5), அஸ்வின் (3) இணை வீழ்த்தியது. இவர்களின் சுழற்றலால் முதல் நாள் முடிவதற்குள்ளேயே ஆஸ்திரேலியாவை சுருட்டி ஓரமாகத் தள்ளியது இந்திய அணி.

பதிலுக்குத் தனது முதல் இன்னிங்ஸைத் தொடங்கிய இந்திய அணிக்கு அணித்தலைவர் நிலையான தொடக்கத்தைக் கொடுத்தார். நேற்று ஆட்ட நேர முடிவில் இந்திய அணி ஒரு இலக்கு இழப்புக்கு 77 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கே.எல்.ராகுலின் இலக்கு வீழ்த்தப்பட்டது. ஆஸி. அணியின் ஓட்ட எண்ணிக்கையை எட்டிப் பிடிக்க 100 ஓட்டங்களே இருந்த நிலையில் இரண்டாவது நாள் ஆட்டத்தைத் தொடங்கியது இந்தியா.

காலையில் புதிய பந்தில் இரு விக்கெட்டுகள் விரைவாக வீழ்த்தப்பட்டன. முதல் நாள் மாலையில் இரவுப் பார்வையாளராகக் களம் கண்ட ரவிச்சந்திரன் அஸ்வின் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து புஜரா மற்றும் விராட் கோலி ஆகியோரின் விக்கெட்டுக்களையும் ஆஸி. அணியின் அறிமுக விரரான முர்பி வீழ்த்தினார். இந்திய அணியின் மூன்று இலக்குகளையும் அவரே சரித்திருந்தார். இந்த ஆட்டத்தில் அவர் மொத்தம் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

அறிமுக ஆட்டத்திலேயே அவரது ஆட்டம் மிகச் சிறப்பாக இருந்தது, இந்தியாவின் ஓட்டக் குவிப்பையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது. ஒரு கட்டத்தில் 168 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது இந்தியா. முர்ப்பியின் சுழலில் சிக்கி ஆஸி. அணி போன்றே சின்னாபின்னமாகிவிடுமோ என்ற அச்சம் எழுந்தபோது, ஒரு பக்கத்தில் நிலைத்து நின்றாடிய ரோகித் சர்மாவுடன் இணைந்தார் ஜடேஜா. இருவரும் அணியைச் சரிவிலிருந்து தூக்கி நிறுத்தினர். இருவரும் இணைப்பாடடமாக 161 ஓட்டங்கள் சேர்த்தனர்.

அணித் தலைவர் ரோகித் சர்மா 212 பந்துகளில் 120 ஓட்டங்கள் எடுத்தார். இதில் 2 சிக்ஸர்கள், 15 பவுண்டறிகள் அடக்கம். 80 ஓவர்கள் முடிவில் புதிய பந்து எடுக்கப்பட்ட வேகத்தில் ரோகித் சர்மா ஆட்டமிழந்தார். கும்மின்ஸின் வேகத்தில் இலக்குச் சரிந்து அவர் வெளியேறினார். தொடர்ந்து வந்த அறிமுக வீரரான சிகார் பரத் 8 ஓட்டங்களுடன் வெளியேறினார். முர்பி அவரை ஓய்வறைக்குத் திருப்பி அனுப்பினார். அதன் பின்னர் வந்த அக்ஸர் பட்டேல் ஜடேஜாவுடன் இணைந்து ஓட்டங்களை வேகமாகச் சேகரித்தார்.

அவர் 102 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இதில் 8 பவுண்டறிகளும் அடக்கம். ஆட்ட நேர முடிவின்போது ஜடேஜா 66 ஓட்டங்களுடனும் பட்டேல் 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்திய அணி 7 இலக்குகள் இழப்பிற்கு 321 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நாளை மூன்றாவது நாள் ஆட்டத்தைத் தொடர இருக்கும் இந்தியா, முழுமையாகத் துடுப்பெடுத்தாடிய பின்னரே ஆஸி. அணி இரண்டாவது இன்னிங்ஸைத் தொடர அனுமதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

### இன்று இரவு தொடங்குகிறது உலகக் கோப்பை மகளிர் கிரிக்கெட்

சர்வதேச கிரிக்கெட் சபையின் 8ஆவது மகளிர் ரி20 உலகக் கோப்பை போட்டி, தென்னாப் பிரிக்காவில் இன்று வெள்ளிக்கிழமை இலங்கை நேரப்படி இரவு தொடங்குகிறது.

முதல் நாள் ஆட்டத்தில் தென்னாப்பிரிக்கா - இலங்கை அணிகள் சந்திக்கின்றன.

இந்தப் போட்டியில் பங்கேற்றுள்ள 10 அணிகள், தலா 5 வீதம் 2 குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் குழு ஒன்றில் ஆஸ்திரேலியா, வங்கதேசம், நியூஸிலாந்து, தென்னாப்பிரிக்கா, இலங்கை அணிகளும், குழு 2இல் இங்கிலாந்து, இந்தியா, அயாலாந்து, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள் அணிகளும் இடம்பெற்றுள்ளன.

இதுவரையிலான 7 போட்டிகளில் 5 முறை கோப்பை வென்று ஆதிக்கம் செலுத்தும் ஆஸ்திரேலியா, தற்போது 6ஆவது முறையாக கோப்பை வெல்லும் முனைப்புடன் வருகிறது.

கடந்த தடவை (2020) இதே ஆஸ்திரேலியாவிடம் இறுதிச்சுற்றில் தோற்று வாகை சூடும் வாய்ப்பை இழந்தது இந்தியா, இலங்கை மகளிர் அணி ஐசிசி தரப்படுத்தலில் 9ஆவது இடத்தில் இருக்கின்றது. அதனால் அந்த அணி மீது பெரிதாக எந்த எதிர்பார்ப்பும் கிடையாது.

இருப்பினும் பிரபலமடைந்துவரும் மகளிர் கிரிக்கெட்டில் இந்தத் தடவை சில காத்திரமான வெற்றிகளைப் பதிக்க அவர்கள் முயன்று வருகின்றனர்.




## ரோஹித் சர்மா புதிய சாதனை

ஆஸ்திரேலியாவுக்கு எதிராகச் சதமடித்ததால் புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார் இந்திய அணித் தலைவர் ரோஹித் சர்மா.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவில் 4 டெஸ்டுகள், 3 ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. டெஸ்ட் தொடர் நேற்று தொடங்கியது. இரண்டாவது நாளான இன்று இந்திய அணி தொடர்ந்து ஆடியது.

இந்திய அணி தேநீர் இடைவேளையின்போது 5 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ரோஹித் சர்மா 118, ஜடேஜா 34 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார்கள். அதன் பிறகு இன்றைய நாளின் 3வது பகுதியில் வீசப்பட்ட முதல் ஓவரில் புதிய பந்தில் இலக்கைச் சிதறவிட்டார் ரோஹித் சர்மா. 120 ஓட்டங்கள் எடுத்த அவருடைய விக்கெட்டை கம்மின்ஸ் வீழ்த்தினார்.

இது ரோஹித் சர்மாவின் 9ஆவது டெஸ்ட் சதம். அதேசமயம், டெஸ்ட் ஆணித் தலைவராக அவர் தனது முதல் சதத்தை எடுத்துள்ளார். இதையடுத்து புதிய சாதனையைப் படைத்துள்ளார்.

டெஸ்ட், ஒருநாள், டி20 என மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் அணித் தலைவராகச் சதமடித்த முதல் இந்திய வீரர் என்கிற பெயரை எடுத்துள்ளார் ரோஹித் சர்மா. தோனி ரி20யில் ஒரு சதமும் அடித்ததில்லை. கடந்த வருடம் ஆசியக் கோப்பைப் போட்டியில் முதல் ரி20 சதத்தை அடித்தார் கோலி. அப்போது இந்திய அணியின் தலைவராக கே.எல். ராகுல் நியமிக்கப்பட்டுவிட்டார்.

இதையடுத்து புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார் ரோஹித் சர்மா.

ஒரு தலைவராக டெஸ்டில் ஒரு சதமும் ஒருநாள் கிரிக்கெட்டில் மூன்று சதங்களும் ரி20யில் இரு சதங்களும் அடித்துள்ளார் ரோஹித் சர்மா.

# பிக்குகள் 13 ஐ எரிக்கவில்லை நாட்டின் எதிர்காலமே எரிப்பு!

## கோவிந்தன் கருணாகரம் ஆக்ரோஷம்



இலங்கை பௌத்த நாடு, பௌத்தர்கள், பௌத்த பிக்குகளை எதிர்த்து எதனையும் செய்ய முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்ட கருத்து வருத்தத்துக்குரியது. 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் அவருக்கு வழங்கிய ஆணையை அவர் மறந்து விட்டார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பௌத்த பிக்குகள் எரிக்கிறார்கள், அவர்கள் எரிப்பது 13 ஆவது திருத்த நகல்களை அல்ல, இந்த நாட்டின் எதிர்காலத்தை என்பதை அரச தலைவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடன உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் கொள்கை உரையில் அதிகாரங்களைப் பரவலாக்கி புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்ற வகையில் அவர் கருத்து வெளியிட்டிருந்தாலும் பொலிஸ் அதிகாரங்கங்கள் இல்லாத அதிகார பரலாக்கம் வழங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஒற்றையாட்சிக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு சாத்தியமற்றது.

75 ஆவது சுதந்திர தினம் கடந்த வாரம் கொண்டாடப்பட்டது. ஆனால், தமிழ் மக்களுக்கு சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை. சுதந்திரமடைந்த நாள் முதல் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டே வருகின்றனர்.

அவர்கள் 30 வருடங்களாக ஆயுத ரீதியில் போராட்டத்தையும் நடத்தினர். வடக்கு கிழக்கில் இருந்து ஆயிரக் கணக்கான இளைஞர்கள் போராட்டத்தில் இணைந்தனர்.

இந்நிலையில் இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இதன் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

இது அரசமைப்பில் உள்ள ஓர் அங்கமாகும். இதனை நிறைவேற்றாது இருப்பது அரசாங்கமே அரசமைப்பை மீறுகின்றது என்பதையே காட்டுகின்றது.

இதேவேளை பௌத்த நாடு என்பதால் பௌத்த பிக்குகளை எதிர்த்து எதனையும் நிறைவேற்ற முடியாது என்று மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டில் அவரை சிறுபான்மை மக்களே ஜனாதிபதியாக்கினர். அந்த மக்களின் கருத்தைக்கூட கருத்திற்கொள்ளாது மைத்திரிபால சிறிசேன கூறியமை தொடர்பில் கவலையடைகின்றேன். 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் அரசமைப்புத் தீர்வு அல்ல. இதுவொரு ஆரம்பப் புள்ளி மாத்திரமே. எங்களுக்கு மீளப்பெற முடியாத சமஷ்டியே தேவையாகும். 13 ஆவது திருத்தச் சட்டத்தை பௌத்த பிக்குகள் எரிக்கின்றனர். அவர்கள் எரிப்பது இந்த நாட்டையே என்பதை புரிந்துகொள்ள வேண்டும். – என்றார்.

### அமெரிக்காவின் உடன்பாட்டுடன்

## சீனாவின் இணக்கமின்றியே நாணய நிதியத்தின் கடன்

### பெறமுடியும் என்கிறார் ஹர்ஷ டி சில்வா



கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீனாவின் இணக்கப்பாடு இன்றி சர்வதேச நாணய நிதியத்தால் இலங்கைக்கு கடனுதவிகளை வழங்க முடியும். அதற்கு அமெரிக்காவுடன் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும். இது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நிலையான அபிவிருத்திக்கு மக்கள் ஆணை அவசியமாகும். எனவே தற்போதைய அரசாங்கத்தில் பொருளாதார மீட்சி என்பது மிகவும் மந்தமானதாகவே காணப்படும். உழைக்கும் போதே செலுத்தும் வரியை நீக்கினால் நாடு 10 கோடி ரூபாவை இழக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதே போன்று வரி எல்லையை இரண்டு லட்சம் வரை அதிகரித்தால் நாடு 630 கோடி ரூபாவை இழக்கும். இழக்கப்படும் மொத்த தொகை 1630 கோடி ரூபாவாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம் உழைக்கும் போதே செலுத்தும் வரி மற்றும் வருமான வரியின் ஊடாக 1000 கோடி ரூபா வருமானத்தை ஈட்ட முடியாது.

நாம் கூறுவது பொய் எனில் எவ்வாறு 1000 கோடி ரூபா கிடைக்கப் பெறும் என்பதை ஜனாதிபதி தெளிவுபடுத்த வேண்டும். அரச ஊழியர்கள் வரி செலுத்துவதற்குத் தயாராகவே உள்ளனர். அதற்காக 36 வீத வரியை அறவிடுவது நியாயமற்றது. உதாரணமாக மாதாந்தம் சுமார் 30 லட்சம் வருமானம் பெரும் ஒருவருக்கு 36 வீத வரி என்பது நியாயமானதாகும். ஆனால் ஒரு லட்சம் பெறுபவர் முதல் 30 லட்சம் பெறுபவர் வரை அனைவருக்கும் ஒரேயளவில் வரி அறவிடப்படுவது நியாயமற்றது.

கடன் மறுசீரமைப்புக்களின் போது கடன் வழங்குநர்களின் ஒரு தரப்பு இணக்கம் தெரிவிக்காவிட்டாலும் சர்வதேச நாணய நிதியத்தால் கடனுதவியை வழங்க முடியும். சுரினா நாட்டுக்கு சீனாவின் இணக்கப்பாடு இன்றியே நாணய நிதியம் கடனுதவியை வழங்கியது. இதே போன்று இலங்கைக்கும் வழங்க முடியும். ஆனால் இது தொடர்பில் அமெரிக்காவுடன் இணக்கப்பாட்டை எட்டுவதற்கு இலங்கை முயற்சிக்க வேண்டும். காரணம் சர்வதேச நாணய நிதியத்தில் அமெரிக்கா பெரும்பான்மை வகிக்கின்றமையாலாகும். இது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும். – என்றார்.

## ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் சேவை மீண்டும் சீனாவுக்குத் தொடக்கம்

### வாரத்தில் மூன்று தடவைகள் நடக்கும்

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான விமான சேவைகளை ஆரம்பிக்க ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய தமது விமான சேவைகளை வாரத்துக்கு மூன்று முறை மீண்டும் ஆரம்பிக்க ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தீர்மானித்துள்ளது.

மீண்டும் திறக்கப்படும் சீன எல்லை சீனா தனது எல்லைகளை மீண்டும் திறந்த நிலையில், சீனாவுக்கான வணிக விமானச் சேவைகளை ஏப்ரல் 2023 முதல் வாரத்தில் இருந்து ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவில் குவாங்சூ, பெய்ஜிங் மற்றும் ஷாங்காய் ஆகிய இடங்களுக்கு விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஸ்ரீலங்கன் தற்போது கொழும்பு மற்றும் குவாங்சூ இடையே வாராந்திர விமானத்தை இயக்குகிற நிலையில், இரண்டாவது விமான சேவையை மார்ச் 4 ஆம் திகதி இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, வாரத்தின் ஒவ்வொரு செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் கொழும்பிலிருந்து குவாங்சோவுக்கான விமானங்கள் இயக்கப்படவுள்ள நிலையில் குவாங்சோவிலிருந்து கொழும்புக்குத் திரும்பும் விமானங்கள் ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இயக்கப்படவுள்ளன.

மேலும் கொழும்பில் இருந்து பெய்ஜிங்கிற்கான விமான சேவைகள் ஏப்ரல் 3 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் ஒவ்வொரு வாரமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் பெய்ஜிங் நோக்கி புறப்படவுள்ளது.

கொழும்பு திரும்பும் விமானங்கள் குறித்த தினத்திற்கு மறுநாள் இயக்கப்படவுள்ளன.

இதேவேளை வார நாள்களில் திங்கள், வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கொழும்பில் இருந்து ஷாங்காய்க்கு விமானங்கள் புறப்படும் மற்றும் ஒவ்வொரு செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் முறையே ஷங்காயிலிருந்து கொழும்புக்கு விமானங்கள் புறப்படத் திட்டமிடப்பட்டுள்ளது.




### இக்கட்டான காலத்தில் நாட்டைவிட்டு

## ஓட்டமெடுக்கும் வல்லுநர்கள் இனி திரும்பி வரவேண்டாம்!

### டயனா கமகே காட்டம்



இக்கட்டான காலங்களில் நாட்டை விட்டு வெளியேறும் தொழில் வல்லுநர்கள் எவரேனும் இருந்தால் அவர்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்பி வர வேண்டாம் என டயனா கமகே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சிம்மாசன உரையின் பின்னர் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில் –

தற்போது நாடு மிகவும் கடினமான சூழ்நிலையில் உள்ளது.

இந்த சூழலில் தொழில் வல்லுநர்களின் சேவை நாட்டுக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

ஆகவே, இவ்வாறான இக்கட்டான காலத்தில் எம்மை விட்டுச் சென்ற வைத்தியர்கள் போன்ற தொழில் வல்லுநர்களின் இந்த நாட்டுக்குத் தேவையில்லை. – என்று கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2023 இல் வெளியிடப்பெற்றது.